பக்கங்கள் – 16+8

விலை – ரூபா 60

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 117

ஞாயிற்றுக்கிழமை
23 மார்ச் 2025

பங்குனி 09 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056


## ஹெரோய்னுடன் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், மார்ச் 23
கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மயானமொன்றில் வைத்து, நபரொருவர் ஹெரோய்னுடன் கைது செய்யப்பட்டுள்ளார். பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத்தகவலுக்கு அமைய 14

சட்டவிரோத திஸ்ஸ விகாரை விவகாரம்

# முதுகில் குத்துகின்றது அரசு புதிய கட்டடம் இன்று திறப்பு

கொழும்பிலிருந்து அதிகாரிகள் வருகை

எதிர்ப்புப் போராட்டத்துக்கு மக்கள் முடிவு

இராணுவக் கண்காணிப்புத் தீவிரம்

யாழ்ப்பாணம், மார்ச் 23

ஸ்ரீலங்கா நாடாளுமன்றத்திலும், வெளியிலும் பல்வேறு சர்ச்சைகளைத் தோற்றுவித்திருந்த, தையிட்டி திஸ்ஸ விகாரைப் பகுதியில் இராணுவத்தின் முழு முயற்சியுடன் மற்றொரு சட்டவிரோதக் கட்டடம் இன்று காலை திறந்துவைக்கப்படவுள்ளது. 14




உதயன்
தையிட்டி விகாரையில்
மேலதிகக் கட்டடங்களா? அப்படி எதுவும் இல்லை!
மறுக்கிறார் பதில் மாவட்டச் செயலர்
தையிட்டி விகாரையில்
சட்டவிரோதக் கட்டடம்; உறுதிப்படுத்தியது படம்!
பதில் மாவட்டச் செயலரின் பச்சைப்பொய் அம்பலம்

திஸ்ஸ விகாரை வளாகத்தில் அமைக்கப்பட்டு வரும் சட்டவிரோதக் கட்டடம் தொடர் பில் 2024ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் திகதி உதயன் வெளியிட்ட செய்தி.

## டிப்பர் கவிழ்ந்து விபத்து ஒருவர் பலி; மூவர் காயம்

மன்னாரில் துயரம்

மன்னார், மார்ச் 23
மன்னார் பெரியமடு பிரதான வீதியில் நேற்று அதிகாலை டிப்பரொன்று கட்டுப்பாட்டை இழந்து கவிழ்ந்து விபத்துக்கு உள்ளானதில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததுடன், மூவர் படுகாயமடைந்தனர்.
விபத்துக்குள்ளான டிப்பரில் நான்கு நபர்கள் பயணித்த 14

## காஸா தொடர்பில் இலங்கை கவலை

கொழும்பு, மார்ச் 23
காஸாவில் மோசமடைந்து வரும் நிலைமை தொடர்பில் ஆழ்ந்த கவலைகொண்டுள்ளதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு 14






'திசைகாட்டியும் பிழையான வழியைத்தான் காட்டுது கண்டியளோ'

## மூர்க்கம் கடற்கரையில் 300 கிலோ கஞ்சா மீட்பு!

சந்தேகநபர்கள் தப்பியோட்டம்!

யாழ்ப்பாணம், மார்ச் 23
வடமராட்சி பருத்தித்துறை மூர்க்கம் கடற்கரையில் பருத்தித்துறை பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் இணைந்து மேற்கொண்ட விசேட நடவடிக்கையின்போது 300 கிலோவுக்கு மேற்பட்ட கஞ்சா மீட்கப்பட்டுள்ளது. 14

## டீசல் அருந்திய குழந்தை சாவு!

யாழ்ப்பாணம், மார்ச் 23
ஊர்காவற்றுறைப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில், உழவியந்திரத்தில் இருந்த டீசலை அருந்திய ஆண் குழந்தையொன்று நேற்றுப் பரிதாபமாக உயிரிழந்துள்ளது.
சதீஸ் சஞ்சித் என்ற ஒன்றரை வயதுக் குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.
உழவியந்திரத்தில் இருந்த டீசலை, 14

யாழ்ப்பாணத் தொலைத் தொடர்புக் கோபுரங்களில்

## பெறுமதியான மின்கலங்கள் திருட்டு முன்னாள் கடற்படைச் சிப்பாய் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 23
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள தொலைத்தொடர்புக் கோபுரங்களில் பொருத்தப்பட்டிருந்த பெறுமதியான 192 14


சஞ்சீவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | ஹந்தஹன ராசி சுப பலன் | NLB ஜய | மெகா பவர் | மஹஜன சம்பத | தன நிதானய | அத சம்பத |
|---|---|---|---|---|---|---|
| திகதி 22.03.2025 | திகதி 22.03.2025 | திகதி 22.03.2025 | திகதி 22.03.2025 | திகதி 22.03.2025 | திகதி 22.03.2025 | திகதி 22.03.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் 4025 | சீட்டிழுப்பு இலக்கம் 1092 | சீட்டிழுப்பு இலக்கம் 051 | சீட்டிழுப்பு இலக்கம் 2131 | சீட்டிழுப்பு இலக்கம் 5783 | சீட்டிழுப்பு இலக்கம் 1813 | சீட்டிழுப்பு இலக்கம் 0358 |
| ஆங்கில எழுத்து V | வெற்றி இலக்கினம் தனுசு | ஆங்கில எழுத்து S | ஆங்கில எழுத்து T | ஆங்கில எழுத்து D | ஆங்கில எழுத்து O | ஆங்கில எழுத்து D |
| வெற்றி இலக்கங்கள் 19 30 73 79 | வெற்றி இலக்கங்கள் 06 32 36 47 | வெற்றி இலக்கங்கள் 4 8 7 9 | சுப்பர் இலக்கம் 05 | வெற்றி இலக்கங்கள் 7 4 6 1 4 4 | வெற்றி இலக்கங்கள் 06 17 21 71 | வெற்றி இலக்கங்கள் 6 1 4 4 |
| விசே. எழுத்து V | | | வெற்றி இலக்கங்கள் 08 27 63 69 | | விசேட எழுத்து O | |

# பச்சை குத்திய மாணவர்களை பாடசாலையில் அனுமதிப்பதா?

## வடக்கு மாகாண பிரதம செயலர் தலைமையில் இறுதி முடிவு

**யாழ்ப்பாணம், மார்ச் 23**

**பச்சை குத்தினால் பாடசாலையில் அனுமதிப்பதா? இல்லையா? என்பது தொடர்பில் வடக்கு மாகாண பிரதம செயலர் தலைமையில் மாகாண கல்வித்திணைக்களம் மற்றும் மாகாண சிறுவர் நன்னடத்தைகள் திணைக்களம் ஆகியவை இணைந்து தீர்க்கமாக ஆராய்ந்து இறுதி முடிவை எடுக்கவேண்டும் என்று யாழ்.மாவட்ட சிறுவர் பாதுகாப்புக்குழு கோரிக்கை விடுத்துள்ளது.**

யாழ்.மாவட்டச் செயலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை சிறுவர் பாதுகாப்புக்குழுக்கூட்டம் இடம் பெற்றபோதே இந்த விடயம் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது கருத்துத் தெரிவித்த கல்வித் திணைக்கள அதிகாரிகள்,

பச்சை குத்துகின்ற மாணவர்கள் தமது கல்வியைத் தொடர்வதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள். பாடசாலைகளில் விளையாட்டுப்பயிற்சிகளின் பொழுது அதிகளவு மாணவர்கள் பச்சை குத்தியிருப்பது தெரியவரும் நிலையில் அடையாளப்படுத்தப்படும் மாணவர்கள் இடைநிறுத்தப்படுகின்றனர் என்றனர்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த மாகாண சிறுவர் நன்னடத்தைகள் ஆணையாளர்,

பச்சை குத்திய மாணவர்களை பாடசாலையில் இருந்து விலக்குவதனால் அவர்களின் எதிர்காலம் கேள்விக்குள்ளாகும் நிலையேற்படும். ஆகவே தீர்மானங்களை எடுக்கின்றபோது ஆராய்ந்து எடுக்கவேண்டும். இன்று பல மாணவர்கள் இதன் காரணமாகத் தங்களுடைய கல்வியை இடைநிறுத்தி உள்ளனர் எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது என்றார்.

இதுகுறித்து யாழ். மாவட்டச் செயலாளர் தெரிவிக்கையில், வடமாகாண கல்வித் திணைக்களம் மற்றும் வட மாகாண சிறுவர் நன்னடத்தைகள் ஆகிய இரண்டு திணைக்களங்களும் இணைந்து வடமாகாண பிரதம செயலரின் பங்குபற்றுதலோடு இந்தப் பிரச்சினைக்கு மாகாண ரீதியாக ஒரு தீர்வை அணுக வேண்டும் - என்றார். (ச-125)

# ஐ.தே.கட்சியாலேயே கொலைக்கலாசாரம்

## கடற்றொழில் அமைச்சர் கொதிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 23

ஐக்கிய தேசியக் கட்சியே இலங்கையில் கொலை மற்றும் சித்திரவதைக் கலாசாரத்தை உருவாக்கியது என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்த பிறகு ஐக்கிய தேசியக் கட்சியினரே கொலைக்கலாசாரத்தை அறிமுகப்படுத்தினர். நாட்டில் இனக்கலவரத்தைத் தூண்டினார்கள். அவசரகாலச்சட்டம், பயங்கரவாதத் தடைச்சட்டம் என்பவற்றைக்கொண்டுவந்து இளைஞர்களை சித்திரவதைகளுக்கு உட்படுத்தி கொலைசெய்தார்கள்.

யாழ். நூலகத்தை எரித்து சாம்பலாக்கியவர்களும் இவர்களே. இவர்கள் இன்று எம்மை கொலைகாரர்கள் என்கிறார்கள். சிறைச்சாலையில் இருந்த குட்டிமணி ஜெகநாதன் போன்றவர்களின் கண்களைத் தோண்டி எடுத்து சிறைக்கைதிகளை கொன்றவர்களும் இவர்களே. போர் மூள்வதற்கு காரணமாக இருந்தவர்கள் இன்று தங்களைப் புனிதர்களாகக் காண்பித்துக்கொள்வதற்கு முற்படுகின்றனர் -என்றார். (ச-44)



# பட்டங்கள் வென்றெடுத்த விழிப்புலனற்றோர் சங்க மாணவர்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 23

யாழ்.பல்கலைக்கழகத்தின் 39 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவில் யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத்தின் அங்கத்தவர்களான வி. விஜயலாதன் முதுமாணிப் பட்டத்தையும் க. யதீபன், யோ.பார்த்தீபன் மற்றும் த.அமலநிதுசன் ஆகியோர் பொதுக்கலைமாணிப் பட்டத்தையும் த.அன்றூட் ஜக்சன் சட்டமாணிப் பட்டத்தையும் அன்ரனி லாவோஸ் மேரிறெசோதா சிறப்புக் கலைமாணிப் பட்டத்தையும் பெற்று பெருமை சேர்த்துள்ளனர்.

அதேவேளை 48 வருடங்களாக பணியாற்றிவரும் சங்கத்தின் பட்டதாரிப் பட்டியல் 100 ஐ எட்டுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-25)

**சுபிரி தன சம்பத**

| திகதி | தினம் | வெற்றி வாரம் |
|---|---|---|
| 22.03.2025 | சனிக்கிழமை | 0491 |

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|
| T | 3 6 0 2 4 9 |

**Super Ball DLB**

| திகதி | தினம் |
|---|---|
| 22.03.2025 | சனிக்கிழமை |

| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|
| 2757 | H | 04 31 71 76 |

**சனிதா DLB**

| திகதி | தினம் |
|---|---|
| 22.03.2025 | சனிக்கிழமை |

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|
| Y | 02 14 33 39 | 4918 |

**SASIRI DLB**

| திகதி | தினம் |
|---|---|
| 22.03.2025 | சனிக்கிழமை |

| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
|---|---|
| 0648 | 21 29 34 |

**லக்ன ராசி DLB**

| திகதி | தினம் |
|---|---|
| 22.03.2025 | சனிக்கிழமை |

| மகரம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
|---|---|---|
| | 17 19 26 44 | 4469 |

**KAPRUKA DLB**

| திகதி | தினம் |
|---|---|
| 22.03.2025 | சனிக்கிழமை |

| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|
| U | 07 | 12 46 50 74 | 1933 |

**அத கோடிபதி DLB**

| திகதி | தினம் |
|---|---|
| 22.03.2025 | சனிக்கிழமை |

| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|
| E | 19 43 58 67 | 2583 |

**வாகன சாரதி தேவை**

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல நிறுவனமொன்றுக்கு வாகன சாரதி தேவை.

தேவையேற்படின் தங்குமிட வசதியும், உணவும் வழங்கப்படும்.

**கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.**



தொடர்பு:- **071 411 5002**

# பிள்ளையானுடன் கருணா இணைவு

கொழும்பு, மார்ச் 23

மட்டக்களப்பில் உருவாக்கப்பட்ட 'கிழக்குத் தமிழர் கூட்டமைப்பு' புதிய கூட்டமைப்பில் பிள்ளையானுடன் கருணா அம்மான் என்றழைக்கப்படும் வி.முரளீதரன் இணைந்து கொண்டதுடன் அதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றையும் நேற்று சனிக்கிழமை கைச்சாத்திட்டுள்ளனர்.

உள்ளூராட்சித் தேர்தலில் களமிறங்குவதற்காகப் புதிய முயற்சியொன்றை பிள்ளையான் மேற்கொண்டு 'கிழக்கு தமிழர் கூட்டமைப்பு' எனும் கூட்டமைப்பு உருவாக்கினார். அதில் பிள்ளையான் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி மற்றும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் தலைமையிலான முற்போக்குத் தமிழர் கழகம் ஆகியவை இணைந்து கடந்தவாரம் ஒப்பந்தமொன்றில் கைச்சாத் திட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதின்ம வயதுக் கர்ப்பம் விழிப்புணர்வு அவசியம்

மகப்பேற்று நிபுணர் எஸ்.ரகுராம் தெரிவிப்பு



**யாழ்ப்பாணம், மார்ச் 23**

**கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது அண்மைக் காலமாக பதின்ம வயதுக் கர்ப்பம் நாட்டில் அதிகரித்துள்ளது. பதின்ம வயதுக் கர்ப்பம் நிகழும்போது தாய்க்கும், சேய்க்கும், சமூகத்துக்கும் பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இதுதொடர்பில் சரியான விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவேண்டும் என்று யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட சிரேஷ்ட விரிவுரையாளரும் பெண் நோயியல் மற்றும் மகப்பேற்று மருத்துவ நிபுணருமான எஸ். ரகுராம் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், ஒரு பதின்ம வயதுப் பெண் சரியாக முதிர்ச்சி அடையாமலும், தனது தேவைகளைச் சரியாக அறிந்து கொள்ளாமலும், கல்வியறிவு போதியளவு இல்லாமலும் கர்ப்பம் தரிக்கும்போது அவர் உடல்ரீதியாகவும், உளரீதியாகவும் தாக்கங்களை எதிர்கொள்ளநேரிடும்.

இலங்கையைப் பொறுத்தவரையில் தாய் சேயுடன் இருக்கின்றபோது கருக்கலைப்புச் செய்கின்ற நிலைகள் இருக்கின்றது. இது சட்ட விரோதமானது. இவ்வாறான சட்ட விரோதச் செயல்களில் ஈடுபடும்போதும் அவர்களிடத்தில் உடல், உளத் தாக்கம் ஏற்படுகிறது. இலங்கையைப் பொறுத்தவரையில் குடும்ப சுகாதார நல மாது என்பவர் எல்லா இடங்களிலும் காணப்படுவதால் அவர்களை அணுகுவது மிகவும் இலகுவானது. ஒவ்வொரு இடங்களிலுமுள்ள மருத்துவமனைகளில் பெண் நோயியல் மகப்பேற்று மருத்துவ நிபுணர்கள் தாராளமாக இருப்பதால் அவர்களிடம் ஆலோசனைகளைப் பெற்று கர்ப்பத்தடை முறைகளைப் பின்பற்றவேண்டும்.

பதின்ம வயதுடைய தாய்க்கு குருதிச்சோகை, உயர்குருதி அழுத்தம், நீரிழிவு போன்றன ஏற்படுவதால் குழந்தைக்கு பின்னாளில் பிரச்சினைகள் ஏற்படலாம். எனவே இது குறித்து சரியானதொரு விழிப்புணர்வைமக்கள் மத்தியில்ஏற்படுத்த வேண்டும் - என்றார். (ச-41-27)



## நூல்கள் கையளிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 23

தற்போது லண்டனில் வாழ்ந்துவரும் மூத்த எழுத்தாளர் யோகேஸ்வரி சிவப்பிரகாசம் எழுதிய 'வேண்டுதல்கள்', 'ஆட்கொண்ட போது', 'எங்கும் எதிலும் இறைவன்', 'இறப்பை எண்ணி' ஆகிய நான்கு நூல்கள் கடந்த புதன்கிழமை கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் நூலகத்துக்குக் கையளிக்கப்பட்டன. (ச-41-66)



## கோவிற்சந்தை திறப்புவிழா

யாழ்ப்பாணம், மார்ச் 23

மக்களின் நிதிப்பங்களிப்போடு புனரமைக்கப்பட்ட நெல்லியடி கோவிற்சந்தை திறப்புவிழா வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேசசபைச் செயலாளர் கணேசன் கம்சநாதன் தலைமையில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் விருந்தினர்களாக வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், வடமாகாண கூட்டுறவு ஆணையாளர் ந. திருலிங்கநாதன், வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் செ.பிரணவநாதன், கோவிற்சந்தை அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கத் தலைவர் சட்டத்தரணி மகிந்தன் உட்பட கோவிற்சந்தை பிரதேசமக்கள், கோவிற்சந்தைப் பிரதேச அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க நிர்வாகிகள், உறுப்பினர்கள், கரவெட்டி தெற்கு, மேற்குப் பிரதேசசபை உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-25,27,100)

## கலைஞர்கள் ஒன்றுகூடல்

தென்மராட்சிப் பிரதேச செயலகக் கலைஞர்களின் ஒன்றுகூடல் நிகழ்வு சாவகச்சேரி சிவன்கோவில் வீதியிலுள்ள தென்மராட்சிக் கலைமன்ற கலாசார மண்டபத்தில் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை மு.ப 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பண்பாட்டு அபிவிருத்திச் செயற்றிட்டத்தின்கீழ் பிரதேச செயலகமும் கலாசாரப் பேரவையும் ஏற்பாடு செய்துள்ள இந்த நிகழ்வில் பிரதேசக் கலைஞர்களை கலந்துகொள்ளுமாறு பிரதேச கலாசாரப் பிரிவினர் அறிவித்துள்ளனர். (ச-25,9)

## கலைஞர்களின் ஒன்றுகூடல்



சண்டிலிப்பாய், மார்ச் 23

சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கலைஞர்களின் ஒன்றுகூடல் நிகழ்வு சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலாளரும், கலாசாரப் பேரவை மற்றும் கலாசார அதிகாரசபையின் தலைவருமான திருமதி சுபாஜினி மதியழகன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பல்துறைக் கலைஞர்களின் நடனம், தனிநடிப்பு, பாடல், உடுக்கு இசை, சிலம்பம், கவிதை, குறும்படம், கூத்துப்பாடல், புத்தாக்க நடனம் முதலான கலைநிகழ்வுகள் இடம்பெற்றன. அத்துடன் கைவினைக் கலைஞர்களால் தயாரிக்கப்பட்ட உற்பத்திப்பொருள்களும் மண்டபத்தில் காட்சிக்காக வைக்கப்பட்டிருந்தன. (ச-41-66)



## சரஸ்வதிசிலை திறந்துவைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 23

அளவெட்டி தெற்கு கலைவாணி சனசமூக நிலைய முன்றலில் உருவாக்கப்பட்ட சரஸ்வதி சிலையை சமயசாரப்படி திறந்துவைக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு ஆளுநர் நா.வேதநாயகன்,சனசமூக நிலையத்தின் தலைவர் வை.சின்னப்பு, வலி.வடக்குப்பிரதேசசபையின் செயலாளர் சு.சுதர்ஜன், பிரதேச கிராம அலுவலர் க.அஜந்தன் ஆகியோர் பங்கேற்றனர். (ச-25,27)

## தவறான முடிவெடுத்து சிறுமி பலி!

யாழ்ப்பாணம், மார்ச் 23

யாழ்ப்பாணம் கோண்டாவில் பகுதியில் தவறான முடிவெடுத்து சிறுமியொருவர் உயிரிழந்துள்ளார்.

கடந்த 20ஆம் திகதி உயிரை மாய்ப்பதற்கு அந்தச் சிறுமி முயற்சித்த நிலையில், அவர் குடும்பத்தினரால் மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். இந்த நிலையில், சிகிச்சையின் போது நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டார். (ம-26)

பூந்தோட்டப் பராமரிப்பாளர் தேவை

யாழ். நகரை அண்டிய பகுதியில் பூந்தோட்டமொன்றைப் பராமரிக்க, அனுபவமுள்ளவர் தேவை.

தொடர்பு:- 071 411 5002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி மன்றங்களையும் வடக்கு - கிழக்கில் கைப்பற்றுவோம்

## ரில்வின் சில்வா உறுதி



**கொழும்பு, மார்ச் 23**

**போர் வெற்றி மற்றும் மின்சாரக்கதிரை என்பவற்றைக்கூறி வாக்குவேட்டை நடத்திய காலம் மலையேறிவிட்டது. உள்ளூராட்சிசபைத் தேர்தலிலும் வடக்கு, கிழக்கு உட்பட அனைத்துச் சபைகளிலும் தேசிய மக்கள் சக்தி வெற்றி பெறும் என்று ஜே.வி.பி.யின் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார். கொழும்பில் கடந்த வியாழக் கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டிலுள்ள அனைத்து உள்ளூராட்சிசபைகளுக்கும் வேட்பாளர்களை நிறுத்தியுள்ளோம். கடந்த பொதுத்தேர்தலில் அனைத்து இடங்களிலும் வென்றோம்.

உள்ளூராட்சிசபைத் தேர்தலிலும் வெல்லமுடியும் என்ற நம்பிக்கை உள்ளது. பொதுத்தேர்தலின்போது கிடைக்கப்பெற்ற மக்கள் ஆணை அதிகரிக்குமேதவிர குறைவதற்கு வாய்ப்பில்லை. பொதுத்தேர்தலின்போது தேசிய மக்கள் சக்திக்கு வாக்களிக்காத நபர்கள்கூட இந்தத் தேர்தலில் வாக்களிப்பார்கள்.

கடந்தகாலங்களில் உள்ளூராட்சிசபைகள் கொள்ளையர்களின் கூடாரங்களாக இருந்தன. மோசடிகள் இடம்பெற்றன. மக்கள் பிரதிநிதிகள் எனக் கூறிக்கொண்டவர்கள் ஒப்பந்தக்காரர்களாகவே செயற்பட்டனர். இந்தநிலைமை எமது ஆட்சியின்கீழ் மாற்றியமைக்கப்படும் - என்றார். (ச-25,44)

## முயற்சியாளர் சந்தை கிளிநொச்சியில் திறப்பு

கிளிநொச்சி, மார்ச். 23

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தின் ஏற்பாட்டில் 'ஒபர் சிலோன்' நிறுவனத்தின் நிதியுதவியில் கிளிநொச்சியைச் சேர்ந்த சிறுதொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் முயற்சியாளர் சந்தை நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் பங்கேற்று சந்தையைத் திறந்துவைத்தார்.

நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட பதில் செயலர் சு.முரளிதரன், ஒபர் சிலோன் நிறுவனத்தின் திட்டத் தலைவர் சின்னத்தம்பி சூரியகுமாரி, கிளிநொச்சி மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் திருமதி நளாயினி இன்பராஜ், மாவட்டச் செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், சிறுதொழில் முயற்சியாளர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ச-22,27)

## குருதிக்கொடை

யாழ்ப்பாணம், மார்ச் 23

மாகாண உள்ளகக் கணக்காய்வு அலுவலர் அமரர் கைலாசபதி ஜெயக்காந்தனின் முதலாம் ஆண்டு நினைவாக குருதிக்கொடை நிகழ்வு நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணி முதல் மதியம் 12.00 மணிவரை கைதடி மாகாணசபை வளாகப் பேரவைச் செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. நிகழ்வில அனைவரையும் கலந்துகொள்ளுமாறு வடக்கு மாகாண உள்ளகக் கணக்காய்வு ஊழியர் நலன்புரிச் சங்கம் தெரிவித்துள்ளது. (ச-26)



## கலந்துரையாடல்

சாவகச்சேரி, மார்ச் 23

தென்மராட்சிப் பிரதேச சிறுதொழில் முயற்சியாளர்களின் உற்பத்திப்பொருள்களுக்கு விலைநிர்ணயம்செய்வது தொடர்பான கலந்துரையாடல் பிரதேச செயலக மண்டபத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. (ச- 25,9)

## நடமாடும் சேவை

வலிகாமம் தெற்குப் பிரதேசசபையின் ஏழாலை உபஅலுவலகத்தினால் நடத்தப்படும் பொதுமக்களுக்கான நடமாடும் சேவை இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிமுதல் பிற்பகல் 1.30 மணிவரை ஏழாலை தெற்கு தமிழ்ப் பொதுப்பணிமன்ற மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. நடமாடும் சேவையில் பொதுமக்கள் தங்கள் ஆதனங்களுக்கான ஆதன வரி, வியாபாரங்கள், தொழில்களுக்கான வரி மற்றும் உரிமக்கட்டணங்களை விரைவாகவும், இலகுவாகவும் செலுத்திக்கொள்ள முடியுமென வலிகாமம் தெற்குப் பிரதேசசபையின் செயலாளர் அ.பிரதீபன் அறிவித்துள்ளார். (ச-41-66)



## போதைப்பொருள் விழிப்புணர்வு

மகளிர்தினத்தை முன்னிட்டு பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலக போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரால் போதைப்பொருள் தடுப்புத் தொடர்பாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டும் செயற்பாடு அண்மையில் பளை நகரப்பகுதியில் இடம்பெற்றது. (ச-25, 9)


கல்வியியல் கலாநிதியை வாழ்த்துகின்றோம்



சமூக முன்னேற்ற கழகங்களின் சமாசத்தின் மதியுரை அறிஞர் பேராசிரியர் கலாநிதி நாகலிங்கம் சண்முகலிங்கன் அவர்களின் பாரியாரும் எங்கள் கல்விப் பணிகளின் வழிகாட்டியுமான

திருமதி கௌரி சண்முகலிங்கன்

அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் 39வது பட்டமளிப்பு வைபவ தொடக்க அமர்வில் கல்வியியலில் கலாநிதி பட்டம் பெற்றமையைப் பாராட்டி மகிழ்கின்றோம்.

வாழ்த்துவோர் : சமூக முன்னேற்ற கழகங்களின் சமாசம்
புனர்வாழ்வு கல்வி அபிவிருத்தி நிதியம்
முதலீட்டுச் சபை
மாவை பாரதி மறுமலர்ச்சி மன்றம்
மாவை பாரதி சனசமூக நிலையம்.

(CS/2788) J-1


## மரண அறிவித்தல்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 10 . 04 . 1952 |  | 22 . 03 . 2025 |

**குலோத்துங்க முதலியார் பரமராஜா**

**(ஓய்வு பெற்ற மேற்பார்வையாளர், வீதி அபிவிருத்தி அதிகார சபை - யாழ்ப்பாணம்)**

ஊரெழு கிழக்கைப் பிறப்பிடமாகவும், சுதுமலை மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட குலோத்துங்க முதலியார் பரமராஜா அவர்கள் நேற்று (22.03.2025) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குலோத்துங்க முதலியார் - அன்னலட்சுமி தம்பதியின் அன்பு மகனும், சிவானந்ததேவி அவர்களின் அன்புக் கணவரும், திவிஜா, புவிஜா (அபிவிருத்தி உத்தியோகத்தர் - காரைநகர் பிரதேச செயலகம்), கலாபன் (பொறியியலாளர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுமன், கார்த்திகேயன் ஆகியோரின் பாசமிகு மாமனும், ஐஸ்வர்யாவின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான ஜெயராஜா, ஜெயராணி, தவராணி, மற்றும் குலராஜா, ஸ்கந்தராஜா ஆகியோரின் சகோதரரும், கருணாமூர்த்தி, மனோரஞ்சிதம் (கனடா), கெங்காதேவி, சாந்தபவான் (கனடா), மனோகரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.03.2025) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது சுதுமலை இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

சுதுமலை மத்தி,
மானிப்பாய்.

**தகவல் : குடும்பத்தினர்**
மகன் - 076 534 8786
077 351 5731

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.மாநகர வேட்புமனுவை நிராகரித்தமை அபத்தம்!

## சட்டநடவடிக்கைக்குத் தயார் மணிவண்ணன் ஆதங்கம்

மக்களை காப்பாற்றுவதற்காக போடப்பட்ட சட்டத்தைக் கொண்டே தமக்கு எதிராக அநீதி இழைக்கப்பட்டுள்ளது. இது இலங்கை சட்டம் ஒழுங்கில் இருக்கக்கூடிய மிகப்பெரும் அபத்தம் என்று யாழ்.மாநகரசபையின் முன்னாள் மேயர் சட்டத்தரணி மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாநகர சபைக்கான தமது வேட்புமனு நிராகரிக்கப்பட்டமை குறித்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பல்வேறு சபைகளுக்கான வேட்பு மனுக்களை தமிழ் மக்கள் கூட்டணி சார்பாக சமர்ப்பித்திருந்தோம். குறித்த வேட்புமனுக்களில் யாழ் மாவட்டத்தின் 03 சபைகளுக்கான எமது வேட்புமனுக்களும் கிளிநொச்சி மாவட்டத்துக்கான கரைச்சிப் பிரதேச சபைக்கான வேட்புமனுவும் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன.

இவற்றுள் யாழ்.மாநகரசபைக்கான வேட்புமனு நிராகரிக்கப்பட்டமைக்கு நேற்றைய தினம் சொல்லப்பட்ட காரணம், 2023 ஆம் ஆண்டு 31 ஆம் இழக்க உபபிரிவு 03 தேர்தல் சட்ட ஏற்பாட்டின் படி, எமது வேட்புமனுவோடு இணைக்கப்பட்ட ஒரு பெண் வேட்பாளரின் உறுதியுரையில், சாத்தியப்பிரமான ஆணையாளர் கையொப்பமிடவில்லை என்ற காரணத்தினால் குறித்த உறுதியுரை நிராகரிக்கப் பட்டமையின் அடிப்படையில் எமது வேட்புமனு நிராகரிக்கப் பட்டுள்ளதாக சொல்லப்பட்டது.

நாம். கடைசியாக இரண்டு ஆண்டுகள் எமது தரப்பு யாழ் மாநகரசபையை ஆட்சி செய்தது.

இம்முறையும் தேர்தல் முடிவுகளில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய தரப்பாக நாம் இருக்கிறோம். வெல்வதற்கான வாய்ப்புகளுடனும் நம்பிக்கையுடனும் தாக்கல் செய்யப்பட்ட யாழ் மாநகரசபைகான் வேட்புமனு நிராகரிக்கப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டு திருத்தப்பட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் திருத்தச்சட்டத் தில் 31 உபபிரிவு 03ன் படி சாத்தியக்கடதாசி கையொப்பமிடப்படவில்லை எனில் குறித்த வேட்புமனு நிராகரிக்கப்படக்கூடாது எனச் சொல்லப்பட்ட நிலையிலும் அதே சட்டத்தை வைத்து எமது வேட்புமனுவை நிராகரித்துள்ளார்கள். இது இலங்கை சட்டம் ஒழுங்கில் இருக்கக்கூடிய மிகப்பெரும் அபத்தம். குறித்த சட்டமீறலை எதிர்த்து நாம் நிச்சயமாக வழக்குத் தாக்கல் செய்வதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளோம் - என்றார். (ச-125)

## உள்ளூராட்சித் தேர்தல் முறைப்பாட்டுக்கு செயலி

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மே மாதம் 6 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில் இது தொடர்பான முறைப்பாடுகளை அளிப்பதற்காக EC EDR எனும் புதிய தொலைபேசி செயலி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

பொதுமக்களின் முறைப்பாடுகளை இந்த செயலி மூலம் அளிக்க முடியும் என்பதுடன் தங்கள் முறைப்பாடு தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கையும் கண்டறிய முடியும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார். இந்த செயலி மூலம் காணொலிகள் மற்றும் மற்றும் படங்களை வழங்கும் வசதியும் உள்ளதாக அவர் குறிப்பிட்டார். (ச-இ)

**வாடகைக்கு / குத்தகைக்கு**

யாழ். இந்துக் கல்லூரி,
யாழ் ஆரம்ப பாடசாலைக்கு அருகில் மேல் வீடு.
3 இணைந்த குளியலறைகள்.
3 அறைகளுடன். வாகனத்தரிப்பிடம்
2 வருட வாடகை / குத்தகைக்குண்டு.
6 மாத முற்பணம்.
(cs.57783) N-1

தொடர்பு: 076 113 9132

**நாதஸ்வரம்**
**வாசிக்க தெரிந்தவர் தேவை**

கொழும்பு ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்திற்கு காலை, மாலை நித்திய பூஜைக்கு நாதஸ்வரம் வாசிக்க தெரிந்த ஒருவர் தேவை. தங்குமிட வசதி செய்து தரப்படும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

98, ஜிந்துப்பிட்டி வீதி, கொழும்பு 13.
0777 261777 / 0772 300162 / 0722 447606

**விஸ்டம்**
தொழினுட்பக் கல்லூரி
இல 63, சிவன் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம்.
A/L 2027 தொழினுட்பப் பிரிவு
29.03.2025
புதிய வகுப்புக்கள் ஆரம்பம்
வெளி மாவட்ட மாணவர்களுக்கு விசேட
நேரசூசி ஒழுங்கு செய்து தரப்படும்.
செயல்முறை கற்பித்தலுக்கான அனைத்து வசதிகளும் கொண்ட
வடக்கின் தனித்துவமான முதல்தர தனியார் கல்வி நிறுவனம்
(CS/44636) J-1
தொடர்புகளுக்கு- 077 248 7774/076 552 9093

**வல்வை முதியோர் இல்லம்**

வீட்டுச் சூழலில் கனிவு நிறைந்த உபசரிப்புடன் சுகாதாரமாகத் தயாரிக்கப்பட்ட நிறை உணவு வழங்குகின்ற வல்வை முதியோர் இல்லம் புதிய முதியவர்களை இணைப்பதற்கு தயாராக உள்ளது.

இல்லத்தில் இணைய விரும்பும் முதியவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

பகுதிநேர ஆண் பராமரிப்பாளர் வேலைக்கு விண்ணப்பிக்க விரும்புபவர்களும் உடன் தொடர்பு கொள்ளவும்.

நிர்வாகி:- 077 810 6857
077 154 2067, 021 226 5551
www.valvaieldrshome.com

**UK GCSE மற்றும் A-Levels Chemistry வகுப்புகள்**

Edexcel மற்றும் Cambridge பரீட்சைகளுக்குரிய வகுப்புகள். UK இல் 15 வருட கற்பித்தல் அனுபவம் கொண்ட ஆசிரியரால் ஆரம்பிக்கப்படவுள்ளது.

தொடர்புகளுக்கு:
Dr. V. சரவணன்
BSc (UCL, UK), MSc (University of London, UK), PhD (UCL, UK)
0706832430

**காணி விற்பனைக்கு**

யாழ்.கட்டற்கரை வீதியில் திருச்சிலுவை
சுகநல வைத்தியசாலை
( கோழிக் குறோஸ் வைத்தியசாலை )
அருகாமையில் 3 பரப்புக் காணி
விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:- 076 473 3427

**காணி விற்பனைக்கு**

நாவற்குளி புகையிரத
நிலையத்திலிருந்து 100m தூரத்தில்
4 பரப்புக்காணி
விற்பனைக்கு உண்டு.

076 330 9761

**வேலையாள் தேவை**

கிளிநொச்சி பரந்தனில் இயங்கும் திருமண மண்டபத்திற்கு முன்அனுபவமுள்ள வேலையாட்கள் தேவை.

- வரவேற்பாளர் ( கிளிநொச்சியில் வசிப்பிடமாக கொண்ட பெண் )
- Room Boy ( தங்கியிருந்து வேலை செய்யக்கூடிய ஆண் )

(CS/27784) K-1
தொடர்பு:- 070 222 2207

**காணி விற்பனைக்கு**

புலோப்பளை பளையில்
காணி விற்பனைக்குண்டு.
(cs 57786) J-1
076 564 7848

**தேவை**

Show room ஒன்றிற்கு விசாலமான
களஞ்சியசாலை தேவை.
யாழ் நகரிற்குள் விரும்பத்தக்கது.

தொடர்பு:- 076 821 9414

**வீடு வாடகைக்கு**

சிறிய வீடு வாடகைக்கு
உள்ளது. அத்துடன் அறைகளும்
வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:- 077 724 2427
077 741 2713

**கட்டடம் வாடகைக்கு உண்டு**

நகரின் மத்தியில்
அலுவலகக்கட்டிடம்
வாடகைக்கு உண்டு.
தரகர் தேவையில்லை.

076 949 2153

**காணி விற்பனைக்கு**

வவுனியா ஓமந்தையில் 10 ஏக்கர்
உறுதியுடனான காணி விற்பனைக்குண்டு.
559 தென்னை மரங்கள், தேசிக்காய்
மரங்கள்,12 கருத்தக்குளம்பன் மா மரங்கள்,
12 விலாட்டு மாமரங்கள், செர்ரி, பலா, ஜம்பு
போன்ற மரங்கள், 3 Cottages,
1 பணியாளர் அறை, 1 Hunt Cottage,
7000 Broiler Cottages, 100 Goat Cottage,
2 கிணறுகள் மற்றும் பல வசதிகளுடன்

தொடர்பு :0770604125
Whats app : 0763678333

**வேலையாட்கள் தேவை**

அரியாலையில் இயங்கும் பலசரக்கு
கடையில் வேலை
செய்யக்கூடியவர்களும்,
முன் அனுபவம் உள்ளவர்களும்
விரும்பத்தக்கது. சம்பளம் நேரில்
பேசித் தீர்மானிக்கலாம்.

077 540 0425

**நாகபூஷணி திருமண சேவை**

வைத்தியர், பொறியியலாளர், அரச, தனியார் துறை,
உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் பல்லாயிரக்
கணக்கில் எம்மிடம் உள்ளனர்.
மிகப் பொருத்தமான ஜாதகங்கள் உடன் தரப்பட்டு,
துரிதமாகத் திருமணம் நிறைவேற்றித் தரப்படும்.

198, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
(வன்னி இன் ஹோட்டலுக்கு அருகில்)
077 138 7596, 071 999 9306, 021 222 9306

**யாழ் மாவட்ட சதுரங்க சம்மேளனம்**
**பொதுக்கூட்ட அறிவித்தல்**

யாழ் மாவட்ட சதுரங்க சம்மேளத்தின் 2025ம் ஆண்டுக்கான பொதுக்கூட்டம் எதிர்வரும் 06.04.2024 (ஞாயிற்றுக்கிழமை) அன்று இல. 09, நந்தாவில் வீதி, தாவடியில் அமைந்துள்ள JDCA அலுவலகத்தில் மாலை 4.30 மணிக்கு நடைபெற உள்ளது. அக் கூட்டத்திற்கு அனைத்து அங்கத்தவர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

செயலாளர்
யாழ் மாவட்ட சதுரங்க சம்மேளனம்

**மணமகள் தேவை**

யாழ். இந்து 1992 இல் பிறந்த
கொழும்பில் தொழில் புரியும் சொந்த வீடு
சொந்த வியாபாரஸ் தலங்கள் உள்ள
3 மாதத்தில் விவாகரத்தான
(குழந்தைகள் அற்ற) மணமகனுக்கு
வேலை, சீதனம் இல்லாத, திருமணம்
முடிக்காத மணமகள் தேவை.

077 906 1527

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை




நாளொரு நல்வார்த்தை

படிப்பில் வரும் வித்தைகளை விரும்பு.
உலகம் விந்தையென வியக்குமாறு புதுமையான
காரியங்களைச் செய்யவே ஆசைப்படு.

– ஔவையார்–

# வளைவும் நெளிவும் நீதிக்கு அழகில்லை


இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்டிருந்த போர்நிறுத்தம், எந்தக் காரணமும் இல்லாமல் இஸ்ரேலால் தன்னிச்சையாக மீறப்பட்டிருக்கின்றது. ஹமாஸுடனான போர்நிறுத்தத்தைத் தொடரவிரும்பவில்லை. ஹமாஸ் பணயக்கைதிகளை விடுவிக்கவில்லை என்பனதான் இந்தத் தாக்குதல்களுக்கு இஸ்ரேல் சொல்லிக்கொள்ளும் காரணங்கள். இருதரப்புக்கும் இடையிலான போர் நிறுத்த உடன்படிக்கைகளை ஹமாஸ் அமைப்பு மிகவும் நாணயமாகக் கடைப்பிடித்தது. சொன்னதைச் சொன்னவாறாகச் செய்தது. ஆனாலும், பேச்சுகளுக்கு அப்பாற்பட்ட பணயக்கைதிகள் விடுவிப்பைக் காரணமாகக் குறிப்பிட்டே தற்போது காஸாவைத் தாக்கி வருகின்றது இஸ்ரேல்.

'வலியவனால் எழுதப்படும் நீதி, அவ்வப்போது அவனுக்கு வளைந்தும் கொடுக்கும்' என்பது உலக நியதி. காஸாவில் தற்போது அதுதான் நிகழ்ந்து கொண்டிருக்கின்றது. காஸாவில் இஸ்ரேலின் அறிவிப்புகள் 'இனச்சுத்திகரிப்புக்கான இலக்கணம் போன்று காணப்படுகின்றது' என்று ஐக்கிய நாடுகள் சபை அறிவித்த பின்னரும், இப்படியான ஒரு மிருகத்தனத் தாக்குதலை இஸ்ரேலால் மேற்கொள்ளமுடிகின்றது என்றால், அதற்குக் காரணம் அமெரிக்காவும், மேற்கு நாடுகளும்தான். ரஷ்யாவோ அல்லது சீனாவோ தமக்கு எதிரான போராட்டங்களை பலப்பிரயோகம் செய்து அடக்கினால், அதை தேசிய துக்கதினம் போன்று பெருப்பித்துப் பூதாகரமாக்கும் மேற்குலகம் இஸ்ரேலின் விடயத்தில் காட்டும் சகிப்புத்தன்மை அருவருக்கத்தக்கது.

இஸ்ரேலின் விடயத்திலும், உக்ரைனின் விடயத்திலும் மேற்குலகம் கொண்டிருக்கும் இரட்டை நிலைப்பாடு பெரும் ஆபத்தானது. அது இலங்கை, மியான்மர், துருக்கி, பாகிஸ்தான் போன்ற நாடுகள் தப்பித்துக்கொள்வதற்கும் வழியேற்படுத்திக் கொடுக்கின்றது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில், இனி வரும்காலங்களில் 'இஸ்ரேலுக்கு ஒரு நீதி, எமக்கொரு நீதியா?' என்ற கேள்வியை இலங்கை தூக்கிப்போடுவதற்கு வாய்ப்புகள் மிகமிக அதிகம். போர்க்குற்றங்களுக்கு எதிரான சர்வதேசப் பிடியிலிருந்து தப்பியோடுவதற்கு சிறு இடைவெளியைத் தேடிக்கொண்டிருக்கும் இலங்கை போன்ற தரப்புகளுக்கு, பெரும் பாதையையே அகலத் திறந்துவிட்ட கதைதான் இது.

இந்த விடயத்தை இலங்கையோ அல்லது பாகிஸ்தானோ விவாதப்புள்ளியாக்கினால், அதற்கு ஐக்கியநாடுகள் சபையிடம் நிச்சயமாகப் பதிலிருக்காது. யதார்த்தம் இவ்வாறிருக்கையில், இனப்படுகொலை போன்ற குற்றங்களுக்கு நீதி கிட்டும் என்பதற்கு என்ன உத்தரவாதம்? விடயம் என்னவென்றால், தேர்தலுக்கு அப்பாற்பட்ட ஆட்சியை நடத்தும் உக்ரைனையும், கொடூர இனப்படுகொலைகளைப் புரியும் இஸ்ரேலையும் கண்டிக்காத மேற்குலகம், அந்த நாடுகளைப் பலப்படுத்துவதாக நினைத்துத் தம்மைப் பலவீனப்படுத்தியுள்ளன. வளைவதும் பின் நெளிவதும் நதிக்கு வேண்டுமானால் அழகாக இருக்கலாம். நீதிக்கு அவ்வாறில்லை. அவ்வாறிருப்பின் அது அபத்தம்.


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com


# யாழ். நூலகம் எரிப்பு சூத்திரதாரி ரணிலா?



குழு அமைத்து விசாரிக்குமாறு
இளங்குமரன் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 23

பட்டலந்த வதைமுகாம் தொடர்பில் விசாரணை நடத்துவதை போன்று யாழ். நூலகம் எரிக்கப்பட்டமை தொடர்பிலும் குழுவை அமைத்து விசாரணைகளை நடத்தவேண்டும் என்று தேசிய மக்கள் சக்தியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமர்வின்போது விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கு மாகாணம் என்பது கல்வியில் தலைசிறந்து விளங்குகின்றது. எமது நாட்டில் 30 வருடங்களாக நிலவிய போருக்கு மூலகாரணங்களில் ஒன்றாக யாழ். நூலக எரிப்பு உள்ளது. யாழ். நூலகத்தையும் தமிழர்களின் உணர்வுகளையும் எரித்து நாசமாக்கிய அன்றைய காலத்தில் கல்வி அமைச்சராக ரணில் விக்கிரமசிங்கவே இருந்தார். இதனால் பட்டலந்த வதைமுகாம் போன்று யாழ். நூலகத்தை எரித்தமை தொடர்பிலும் விசாரணைக் குழுவை அமைத்து நீதியை நிலைநாட்டவேண்டும்- என்றார். (ச-இ)

# மாத்தறையில் துப்பாக்கிச்சூடு இருவர் பலி



கொழும்பு, மார்ச் 23

மாத்தறையில் நேற்றுமுன்தினம் நடந்த துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் இரண்டு இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர். வாகனமொன்றில் வந்த இரண்டு அடையாளம் தெரியாத துப்பாக்கிதாரிகள் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் மீது துப்பாக்கிச்சூடு நடத்திவிட்டுத் தப்பிச்சென்றுள்ளனர்.

துப்பாக்கிச்சூட்டில் பலியானவர்கள் 28 மற்றும் 29 வயதுடையவர்களாவர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-இ)

# குற்றவாளிகளின் கைரேகைகள் டிஜிற்றல் மயம்

கொழும்பு, மார்ச் 23

இலங்கையில் குற்றச்செயல்களில் ஈடுபட்ட குற்றவாளிகளின் கைரேகைகளின் பெரிய தரவுத்தளத்தைப் பொலிஸார் டிஜிற்றல் மயமாக்கியுள்ளனர். அதற்கமைய 10 மில்லியன் கைரேகைகள் புலனாய்வு நோக்கங்களுக்காக சேகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்த டிஜிற்றல் கைரேகைகளை எந்தநேரத்திலும் அணுகமுடியும் எனவும் விரைவான மற்றும் திறமையான விசாரணைகளுக்கு இது மதிப்புமிக்க கருவியாகப் பயன்படும் எனவும் குற்றப் பதிவுப் பிரிவின் பணிப்பாளர் எஸ்.எஸ்.பி ருவன் குமார தெரிவித்துள்ளார். (ச-இ)

# மனைவி வெட்டிக்கொலை கணவன் கைது

மாத்தளை இரத்தோட்டை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இசுருகம பிரதேசத்தில் மனைவியை வெட்டிக்கொலைசெய்த குற்றச்சாட்டில் கணவன் இரத்தோட்டை பொலிஸாரால் நேற்று சனிக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார். குடும்பத்தகராறு காரணமாக இந்தக் கொலை இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது. (ச-இ)

ஐ.ம.சக்தியின்

# கொழும்பு மாநகரசபை மேயர் வேட்பாளர் ஹனிபா

கொழும்பு மாநகரசபைக்கான மேயர் வேட்பாளராக ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் மருத்துவர் ருவைஸ் ஹனிபா களமிறக்கப்பட்டுள்ளார் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். (ச-இ)

நாளை

திங்கட்கிழமை-பங்குனி- 09

24.03.2025

சுபநேரம் : 11.16 - 01.46

ராகுகாலம் : 07.46 - 09.16


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம் 03 . 07 . 1932

மறைவு 22 . 03 . 2025

## திருமதி தர்மலிங்கம் முத்துப்பிள்ளை

மூளாயைப் பிறப்பிடமாகவும் சங்கரத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தர்மலிங்கம் முத்துப்பிள்ளை அவர்கள் நேற்று (22.03.2025) சனிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சதாசிவம்-சுந்தரம் ஆகியோரின் பாசமிகு கனிஷ்ட மகளும் காலஞ்சென்ற தர்மலிங்கத்தின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-அன்னப்பிள்ளை ஆகியோரின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்றவர்களான இலட்சுமிபிள்ளை கார்த்திகேசு தங்கம்மா மற்றும் நடராசா (சிங்கப்பூர்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சுதந்திரதேவி சுதந்திரமலர், தவக்குமார், நந்தகுமார் (உபதபாலதிபர் சங்கரத்தை) காலஞ்சென்ற செல்வகுமார் ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்றவர்களான சிற்காந்தா யோகேஸ்வரன் மற்றும் கருணாவதி சுகந்தி (ஆசிரியர்), ஆகியோரின் பாசமிகு மாமியாரும் கஜேந்திரன் (கொழும்பு), லக்ஸ்மன் (கொழும்பு), நக்மிதா (மாணவி, கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.03.2025) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

செல்லத்துரை வீதி,
சங்கரத்தை, வட்டுக்கோட்டை
077 604 1800 (தவக்குமார்)
077 888 0521 (நந்தகுமார்)

தகவல்:
குடும்பத்தினர்.

(CR 44643) V-1

# மகளிர்தின நிகழ்வு!

யாழ்ப்பாணம், மார்ச் 23

கைதடி தென்மேற்கு சரஸ்வதி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் சர்வதேச மகளிர்தின நிகழ்வு தலைவி டஸ்னி தலைமையில் கைதடி மேற்கு சரஸ்வதி கலையரங்கத்தில் எதிர்வரும் 26 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சரஸ்வதி இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சிப் பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் க.லலிதா சங்கர் கலந்துகொள்ளவுள்ளார். (ச-22,159)

# மரண அறிவித்தல்

## தம்பிராசா (டாங்கர்) கோதைநாயகி (கோமதி)



புங்குடுதீவு பத்தாம் வட்டாரத்தை பிறப்பிடமாக வும் இராமநாதன் கலட்டி கோப்பாய் தெற்கு கோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிராசா (டாங்கர்) கோதைநாயகி (கோமதி) அவர்கள் கடந்த 20.03.2025 வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தளைய சிங்கம் - ஆச்சிக்கண்ணு தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற செல்லையா - மீனாட்சி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தம்பிராசா (டாங்கர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற மோகனாம்பாள் ஜெகதாம்பாள் (சாந்தி), காலஞ்சென்ற இந்திரகுமார் (அப்பன்,) இராசகுமார் (ராசன்), ஜனிதாம்பாள் (ஜனிதா-சுவிஸ்) காலஞ்சென்ற கர்ணகுமார் தாருகா (பிரான்ஸ்), ஆகியோரின் பாசமிகு தாயாரும், உருத்திரகுமாரன் (வெள்ளையன்), காலஞ்சென்ற சந்திரதாஸ் கிஷோசாந்தி காலஞ்சென்ற யோகேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், லதீபா-நிரோஷன் லக்சிகா- பிரசன்னா(பிரான்ஸ்) லதுஷன் லதுஷா-கிஷோர் (ஜேர்மனி), ஜகானா (சுவிஸ்), நிகேஷ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அத்விதா, அகித்யா, அவனிதா ஆகியோரின் பாசமிகு பூட்டியும், காலஞ்சென்றவர்களான பஞ்சலிங்கம் பூலோகநாயகி (கிளி) மற்றும் அமிர்தநாயகி (ராணி - லண்டன்), சிவலிங்கம் (சிவா-சுவிஸ்) காலஞ்சென்றவர்களான கிருபானந்தலிங்கம் (கிருபா), சதானந்தலிங்கம் (சதா) மற்றும் தெய்வநாயகி (வவா-சுவிஸ்) சுவீந்திரலிங்கம் (இந்திரன்-ஜேர்மனி) சதீஸ்லிங்கம் (தீசன்- சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், லீலாவதி (லண்டன்) காலஞ்சென்றவர்களான மாணிக்கவாசகர் (வாத்தி) ஜெகநாதன் (நாதன்) மற்றும் ஜெயராணி (சுவிஸ்) வினிதாரனி (சுவிஸ்) ராஜகுமுதினி (சுவிஸ்) மணிவண்ணன் (சுவிஸ்) சிவசக்தி (ஜேர்மனி) ரஜனி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.


அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை (24-03-2025) திங்கட்கிழமை அன்று காலை8.00 மணியளவில் அவரது இல்லத்திலும் தொடர்ந்து தகனக் கிரியைகள் புங்குடுதீவு மணற்காடு இந்து மயானத்திலும் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

ராசன் (மகன்) - 077 990 9644
பதுதன் (பேரன்) - 075 071 0167

(CS/ 2794) J-1

தகவல் :
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



## திருமதி தேவராசா நாகேஸ்வரி

வண்ணார் பண்ணையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தேவராசா நாகேஸ்வரி அவர்கள் கடந்த 19.03.2025 புதன்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துவேலு - தங்கமுத்து தம்பதியின் அன்பு மகளும், காலஞ்சென்ற மார்க்கண்டு - சின்னம்மா தம்பதியின் பெறா மகளும், காலஞ்சென்ற செல்லையா - கனகம்மா தம்பதியின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா - செல்லமுத்து, கனகலிங்கம் - இராசமணி தம்பதியின் பாசமிகு மருமகளும், தேவராசா (காலி ஆனந்தம், ஆனந்தா ஸ்ரோர்ஸ், காலி) அவர்களின் அன்பு மனைவியும், Dr.லிங்கநாதன், வினோத், சுகந்தன், கங்கா ஆகியோரின் அன்புத் தாயாரும், நளாயினி, சிந்துஜா, செந்துஜா ஆகியோரின் அன்பு மாமியாரும், கஸ்தூரி, லக்ஸ்மன், அக்சயன், அகிஷன், தாரணா, ஹம்சிகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான நாகராசா, கமலாதேவி, தனலட்சுமி மற்றும் தியாகராசா, வசந்தாதேவி, விமலாதேவி, வரதராஜா, சற்குணராசா, செல்வராசா, சந்தானலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்றவர்களான சிவபாதசுந்தரம், நடராசா, இராசலிங்கம், ஜெயராஜா மற்றும் சகுந்தலாதேவி, தயாநிதி, திலகவதி, கமலநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற குகதாஸ், மற்றும் அருமைத்துரை, சண்முகதாசன், புஸ்பரஞ்சினி, தவரஞ்சினி, தவமணி, முருகதாஸ், கோசலாதேவி, ஞானகலாவதி, ஜெயவதி, சிவபதி, தயாநாதன், தயாவதி, பிறேமாவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான மகாலிங்கம், ஜெயக்குமார், மற்றும் சிவகங்கை, செல்வராஜினி, செல்வதேவி, சிவானந்தமூர்த்தி, பஞ்சாட்சரசிவம், வீரகத்திப்பிள்ளை, மலர்மதி, தவயோகராசா, இராசயோகம், விஜேந்திரன், ஜெயகாந்தன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.03.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தாயின் மடியில் 21.06.1942

இறைவன் அடியில் 19.03.2025


தகவல்:
குடும்பத்தினர்
வண்ணார்பண்ணை
077 999 8134

(CS/2786) J-1

Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
10 . 06 . 1945



மறைவு
22 . 03 . 2025

## தங்கராசா கண்மணி அம்மா

இணுவில் தெற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தங்கராசா கண்மணி அம்மா அவர்கள் நேற்று 22.03.2025 சனிக்கிழமை அதிகாலை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மார்க்கண்டு தங்கராசா அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான தம்பிஐயா-அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு-கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான துரைராசா, பரராஜசிங்கம், பொற்பதி அம்மா அவர்களின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான யோகம்மா, துரைராசா பரமசாமி (சின்னமணி) ஆகியோரின் மைத்துனியும் சிவாகரன்-துஸ்யந்தினியின் அன்புத் தாயாரும் கருணாகர ஐயா-சிவாகரனின் மாமியாரும் காருண்யா, விசாகன் அவர்களின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் சமாதிக்கிரியைகள் இன்று (23.03.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம்பெற்று தாவடி இந்துமயானத்தில் சமாதி வைக்கப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :
**குடும்பத்தினர்**
சிவாகரன் துஸ்யந்தினி
**077 957 6835, 077 513 1109**

**இணுவில் தெற்கு,**
**இணுவில்.**

(CS 57811) V-1

# அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



கடந்த 22.02.2025 சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவி

## அமரர் கனகரட்ணம் சின்னம்மா

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (24.03.2025) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அதனைத்தொடர்ந்து நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நண்பகல் 12.00 மணியளவில் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகைதருமாறு**
**அன்புடன் அழைக்கின்றோம்.**

**குடும்பத்தினர்**
**மகன் - மனோகரன்**
**(முன்னாள் இலங்கை வங்கி முகாமையாளர்)**

**பருத்திக்கலட்டி,**
**சுன்னாகம்.**

(cs.27010) (N-1)

# மரண அறிவித்தல்



**தாயின் மடியில்**
**18.08.1976**

**இறைவன் அடியில்**
**20.03.2025**

## இராசலிங்கம் கேசவன்

**(வேலணை சரஸ்வதி வித்தியாலயம், யாழ் மத்திய கல்லூரி)**

வேலணையைப் பிறப்பிடமாகவும், U.K மற்றும் France இனை வதிவிடமாகவும் 2ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்தை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட இராசலிங்கம் கேசவன் அவர்கள் கடந்த (20.03.2025) வியாழக்கிழமை அகால மரணமடைந்து இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராசலிங்கம் (இளைப்பாறிய அதிபர்) மற்றும் - யோகேஸ்வரி (இளைப்பாறிய ஆசிரியை) ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்கள்ான தர்மலிங்கம், சண்முகலிங்கம் ஆகியோரின் பெறாமகனும், இராஜேஸ்வரி, காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை ஆகியோரின் மருமகனும், செழியன் (Canada), மேகலா (PDHS Jaffna), Dr. நிரஞ்சன் (Colombo), முரளீதரன் (UK) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் Dr. சதாபானு ஜனகன் (UK), Eng. சுமுகன் (Australia) ஆகியோரின் உடன்பிறவா சகோதரரும், பத்மினி (Canada), Eng. மனோகரன், கலைச்செல்வி (Legal Draughtsmen Department) ஆகியோரின் மைத்துனரும் அஜீன் (St.Patrick's College), வசிகா (Jaffna Hindu Ladies college) ஆதிகேசன் (St.John's college) ஆகியோரின் அன்புத் தந்தையும், அபிநாத் (IIT Campus, Colombo), விபிசன் (பொறியியல் பீடம், UOM), கவின், ஸ்ரீஸ்கந்தன் (UK) ஆகியோரின் அன்பு மாமனாரும், துர்க்கா (Canda) அக்சயன், கவிநயா ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.03.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் இல 6, 2ம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நண்பகல் 12.00 மணியளவில் வேலணை சாட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**
**Dr. Niranjan - 077 363 8489**
**M.Megala - 076 668 8423**


**இல 6, 2ம் குறுக்குத்தெரு**
**யாழ்ப்பாணம்**

(CS/2781A) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31 ஆம் நாள் நினைவு அழைப்பு

தோற்றம்
10 . 05 . 1950



மறைவு
21 . 02 . 2025

**அமரர் நாகலிங்கம் கருணாநிதி**

மணல்தறை லேன், யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் இல 12 கலட்டி அம்மன் வீதி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் நாகலிங்கம் கருணாநிதி அவர்கள் 21.02.2025 அன்று இயற்கையெய்தியு செய்தி அறிந்து அன்னாருக்கு இறுதி அஞ்சலி செலுத்தியும் பல வழிகளிலும் குடும்பத்தாருக்கு ஆறுதல் தெரிவித்த அன்புள்ளங்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

31 ஆம் நாள் நினைவு 23.03.2025 அன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

(CS 2787) V-1

**குடும்பத்தினர்.**

# எரிமலை வெடிப்பு!

இந்தோனேசியாவின் கிழக்குப் பகுதியில் உள்ள எரிமலை வெடித்துச் சிதறி வருவதால், அந்தப் பகுதியூடான விமானப் பயணங்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன. (ம)

**வேலை வாய்ப்பு**
யாழ்நகரில்
வேலைவாய்ப்பு.
T.P 077 120 1137

## 4 ஆம் ஆண்டு நீங்காத நினைவுகள்

மண்ணில்
28 . 11 . 1936



விண்ணில்
23 . 03 . 2021

**சிவபாக்கியம் நல்லம்மா**


அம்மா, அன்பும் அரவணைப்பும் ஆறுதலும் கூறி
எங்களை அழகாக வாழ வைத்தீர்கள்
மெழுகாய் உருகி எங்களை ஒளியாய் பிரகாசிக்க செய்தீர்கள்
ஒருகணத்தில் எங்களை விட்டு ஓடிச்சென்றீர்கள்
எங்கம்மா சென்றீர்கள் இளைப்பாறுங்கள் இறைவனுடன்
உங்கள் ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்

இல: 200
செம்பாடிக்லோன் அரியாலை
மேற்கு யாழ்ப்பாணம்

(CS 57804) V-1

**குடும்பத்தினர்.**

## 31 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த 21.02.2025 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த
எமது குடும்பத்தலைவர்

# அமரர் தம்பையா அழகரத்தினம்

அன்னாரின் வீட்டுக்கிருத்தியை இன்று (23.03.2025) ஞாயிற்றுக் கிழமை **"குபேரமஹால் மண்டபத்தில்" (சுதுமலை அம்மன் கோயில் அருகாமை)** முற்பகல் 11.30 மணியளவில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளு மாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அன்னாரின் மரணச்செய்தி கேட்டு நாம் துயருற்று இருந்த வேளையில் நேரில் வந்தும், தொலைபேசியூடாகவும், முகநூல், மின்னஞ்சல் மூலமாகவும், எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும், அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், மலர்வளையங்கள், மலர்மாலைகள் சாத்தியவர் களுக்கும், உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் இன்றுவரை எமக்கு சகல உதவிகளையும் செய்த அன்பு நெஞ்சங்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள் கின்றோம்.


**சுதுமலை தெற்கு,**
**மானிப்பாய்.**

**குடும்பத்தினர்**
**077 [illegible] 6478**

(cs 57777) (N-1)

## மரண அறிவித்தல்

தோற்றம்
23 . 10 . 2005



மறைவு
21 . 03 . 2025

**பிரேமானந் சாருஜன்**

இணுவிலைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட யாழ் பரியோவான் கல்லூரி 2024/A உயர்தரக்கணிதப்பிரிவின் மாணவன் பிரேமானந் சாருஜன் நேற்றுமுந்தினம் (21.03.2025) வெள்ளிக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் பிரேமானந் (கிளி/ அக்கராயன் மகாவித்தியாலய பிரதி அதிபர்) பஜிதா தம்பதியினரின் அன்பு மகனும் , கனகரெத்தினம் (கண்ணன் நயினாதீவு) செல்வராணி (ராணி, நயினாதீவு) காலஞ்சென்ற பரமநாதன் (கட்டுவன்) மற்றும் சிவமணி தம்பதிகளின் அன்புப் பேரனும் சிறிகரன் சிவகேஸ்வரி தம்பதியினரின் பெறாமகனும் சுகந்தன்-தனுசியா, பஜிதரன்-கலைவாணி, பானுசந்தர்-கஜந்தா, பபிராஜ்-சிவறஞ்சனி ஆகியோரின் அன்பு மருமகனும் பவிதன், பானுகா ஆகியோரின் உடன் பிறவாச்சகோதரனும் அட்ஷயா, அபிசயா ஆகியோரின் அன்பு மைத்துணரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.03.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

கோவில் வாசல்
கே.கே.எஸ் வீதி
இணுவில் யாழ்ப்பாணம்
(பவி சாரு பூங்காவிற்சோலை குடும்பத்தினர்)

தகவல்:
**குடும்பத்தினர்**
**077 397 6203**

(CS 57813) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# Keells அதன் முதல் கிளையை வட மாகாணத்தில் திறந்துவைத்து யாழ்ப்பாணத்தையும் தன்வசப்படுத்துகின்றது

Keells, வட மாகாணத்தில் தனது முதல் கிளையைத் திறந்துவைத்துள்ளது. தரம், மலிவு விலை, பலதரப்பட்ட தயாரிப்புகள், சிறந்த வசதி மற்றும் சமூக மேம்பாட்டிற்கான அதன் உறுதிப்பாட்டை யாழ்ப்பாணத்திற்கும் நகர்த்துகின்றது.

யாழ்ப்பாணத்தில் எமது முதலாவது பல்பொருள் அங்காடி இதுவாகும். Keells 2015 முதல் இந்தப் பிராந்தியத்துடன் நெருக்கமாக இணைக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் உள்ள Keells சேகரிப்பு மையம் ஒவ்வொரு மாதமும் சுமார் 200,000 கிலோ புதிய விளைபொருள்களை பெற்றுவருவது குறிப்பிடத்தக்கது. நம் நாட்டு விவசாயிகளுக்கு ஆதரவளிக்கும் அதேவேளையில் உயர்தரப் பொருள்களின் நிலையான விநியோகத்தையும் இதன் மூலம் உறுதிசெய்கின்றது.




யாழ் நகரின் மையப்பகுதியில் ஸ்டென்லி சாலை மற்றும் மணிக்கூட்டுக் கோபுரச்சந்திக்கு அருகில் அமைந்துள்ள எமது புதிய கிளையானது, ஏராளமான வாகன தரிப்பிட வசதியுடனும், பல நுழைவாயில்களிலிருந்து எளிதாக அணுகக்கூடிய வசதிகளையும் கொண்டுள்ளது. இவ்விரிவாக்கம், எம் நாட்டின் சமூகங்களுக்கு சிறந்த ஷொப்பிங் அனுபவம், வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார ஆதரவை வழங்குவதன் மூலம் அனைத்து இலங்கையர்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தும் Keells இன் உன்னத நோக்கத்தையும் அடிக்கோடிட்டுக் காட்டுகின்றது.

உள்நாட்டு சிறப்பம்சங்களுடன் கூடிய ஒழுங்கமைக்கப்பட்ட ஷொப்பிங் அனுபவம்

Keells யாழ்ப்பாணக்கிளை, இந்தப் பிராந்தியத்திலிருந்து நேரடியாகப் பெறப்படும் புதிய விளைபொருள்கள், கடல் உணவுகள், இறைச்சிகள் மற்றும் சிறப்புப் பொருள்களின் விரிவானதோர் தெரிவை வழங்குகின்றது. வாடிக்கையாளர்கள் இப்போது இப்புதிய அனுபவத்துடன் இணைந்து கொள்ளலாம்.

- யாழ்ப்பாணத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய பழங்கள், காய்கறிகள், இறைச்சிகள் மற்றும் கடல் உணவுகள், உள்நாட்டு விவசாயிகள் மற்றும் விநியோகஸ்தர்களை ஆதரிக்கும் அதேவேளையில் சிறந்த தரத்தையும் உறுதிசெய்கின்றன.
- சிறப்பு அரிசி வகைகள், மா மற்றும் மசாலாப் பொருள்கள்.
- கூடுதல் வசதிக்காக செல்ப் செக்அவுட் கவுண்டர்கள் உட்பட ஓர் அதிநவீன ஷொப்பிங் அனுபவம்.
- ஒன்லைன் ஓர்டர் மற்றும் டெலிவரி வசதி.
- குறிப்பாக நெக்சஸ் லோயல்டி உறுப்பினர்களுக்கு பல சலுகைகளுடன் தினசரி சேமிப்பு.

கீல்ஸ் தனது புகழ்பெற்ற முன்தயார்செய்த உணவு வகைகளை அறிமுகப்படுத்துவதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றது. காலை உணவு, மதிய உணவு மற்றும் இரவு உணவுத்தெரிவுகளுடன் பேக்கரி டிலைட்கள், பீட்சாக்கள், பர்கர்கள், ரோஸ்ட் சிக்கன் மற்றும் இன்சுவை விருந்துகளின் அற்புதமான தெரிவுகளையும் வழங்குகின்றது. கொபி, மில்க் ஷேக்குகள் மற்றும் வொபள்ஸ் ஆகியவற்றைக் கொண்ட Kaf வாடிக்கையாளர்கள் சற்று இளைப்பாறி, தங்களுக்குப் பிடித்த சிற்றுண்டிகளை அனுபவிக்கும் சிறந்த ஸ்தானத்தையும் வழங்குகின்றது.

**வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சி மூலம் வட மாகாணத்தை மென்மேலும் வலுப்படுத்தல்**

யாழ்ப்பாணத்தில் Keells இன் இருப்பு சில்லறை விற்பனை முறைக்கு அப்பாற்பட்டது இது சமூகத்திற்கு ஒரு முதலீடாவதுடன், புதிய வாய்ப்புகளை உருவாக்கி பொருளாதார வளர்ச்சியையும் மேம்படுத்துகின்றது.

- 80இற்கும் அதிகமானோரைக் கொண்ட விற்பனை நிலையக் குழு முழுவதுமாக வடக்கு மாகாணத்திலிருந்து ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு, அர்த்தம் பொதிந்த வேலைவாய்ப்பு மற்றும் தொழில் வளர்ச்சி வாய்ப்புகளை வழங்குகின்றது.
- தொடர்ச்சியான பயிற்சி மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களினால் ஊழியர்கள் மதிப்புமிக்க திறன்களையும் தொழிற்துறை முன்னேற்றத்தையும் பெறுவதை உறுதிசெய்கின்றன.
- யாழ்ப்பாணம் சேகரிப்பு மையம் புதிய விளைபொருள்களை ஆதாரமாகக் கொண்டு, நம் நாட்டு விவசாயிகள் மற்றும் விநியோகஸ்தர்களை நேரடியாக ஆதரிப்பதில் தொடர்ந்து முக்கிய பங்கினை வகிக்கின்றது.
- யாழ்ப்பாணத்தை தளமாகக் கொண்ட வணிகங்கள் மற்றும் தொழில்முனைவோருடன் இணைந்து சந்தைப்படுத்தல் பரப்புரையை ஆரம்பித்து உட்சேர்ந்த மற்றும் சமூகம் சார்ந்த அணுகுமுறையை உறுதி செய்துள்ளது.
- நிலைபேண்தகைமை மற்றும் சமூக மேம்பாட்டிற்கான அர்ப்பணிப்பு
- Keells நிறுவனம் அதன் சுற்றுச்சூழல், சமூக மற்றும் ஆளுகை நிலையுறுதியில் ஸ்திரத்தன்மையுடன் உள்ளது. யாழ்ப்பாணத்தில் நிலைபேண்தகைமை மற்றும் சமூக நலனை ஆதரிப்பதற்கான முயற்சிகளை செயற்படுத்திவருகின்றது. அவற்றுள்:-
- யாழ்ப்பாணம் முழுவதும் ஏழு பிளாஸ்டிக் மீள்சுழற்சி தொட்டி இடங்களுடன் கழிவு மேலாண்மை மற்றும் மீள்சுழற்சித் திட்டங்கள்.
- நூற்றுக்கும் மேற்பட்ட குழந்தைகளுக்கு ஆதரவளிக்கும் மூன்று பாடசாலைகளுக்கு தற்போது பயனளிக்கும் ஆரம்ப பாடசாலை உணவுத் திட்டங்கள், மேலும் விரிவாக்கத் திட்டங்களுடன்.
- சமூக நல்வாழ்வுக்கான keells இன் நீண்டகால அர்ப்பணிப்புடன் ஒத்துப்போகும் கூடுதல் சமூக பொறுப்புணர்வு முயற்சிகள்.

**யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு அன்பு மிகுந்த இனிய வரவேற்பு.**

யாழ்ப்பாண மக்களின் அன்பான வரவேற்புக்கு keells மிகுந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றது. மேலும் பிராந்தியத்தின் ஒருங்கிணைந்த பகுதியாக மாற ஆவலுடன் காத்திருக்கின்றது. பெப்ரவரி நடுப்பகுதியில் தொடங்கப்பட்ட உள்நாட்டு சந்தைப்படுத்தல் பரப்புரை, திறப்புவிழாவிற்கான எதிர்பார்ப்பையும் உற்சாகத்தையும் வெற்றிகரமாக உருவாக்கியதுடன், பாரம்பரிய யாழ்ப்பாணக் கலாசார விழுமியங்கள் மற்றும் மதிப்புமிக்க நலன்விரும்பிகளின் பங்களிப்புடன் ஒரு பிரமாண்டமான விழாவாகக் கொண்டாடப்பட்டது.

Jonu Keells குழுமத்தின் ஒரு பகுதியாக, Keells இலங்கை முழுவதும் தனது தடத்தை விரிவுபடுத்தி, ஒப்பற்ற சேவை மற்றும் தரமான தயாரிப்புகளை அதிகமான சமூகங்களுக்கு வழங்கிவருகின்றது. யாழ்ப்பாணத்தில் அதன் முதல் கிளையை திறப்பது ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லாகும். இது உன்னதம்மிக்க வாழ்வை வளப்படுத்துவதற்கும் உள்நாட்டு பொருளாதாரங்களை ஆதரிப்பதற்கும் அதன் உறுதிப்பாட்டை வலுப்படுத்துகின்றது.

தூய அத்தியாவசியப் பொருள்கள் முதல் வீட்டுத்தேவைகள் மற்றும் மகிழ்ச்சிகரமான உணவு வகைகளின் உன்னத அனுபவங்கள்வரை அதன் சிறந்த சலுகைகளை அனுபவிக்க யாழ்ப்பாணத்தில் உள்ள Keells இற்கு அனைவரையும் பேரன்புடன் வரவேற்கின்றது.. உட்பிரவேசித்து Keellsஇன் அதிசிறந்த வசதி, தரம் மற்றும் அன்புடனான வரவேற்பை அனுபவித்திட இதோ நாம் இப்போது யாழ்ப்பாணத்தில்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

V SCREEN
HNB ASSURANCE
ராகதேவன் ராஜாங்கம்
CO-POWERED BY
VITAL MASKS PRIVATE LIMITED
29. 03. 2024 - சனிக்கிழமை - மாலை 05.31 மணி முதல்
சபாலிங்கம் அரங்கம் - யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
யாழ் "சுருதிலயா" இசைக் குழுவின் இசையில் இந்திய பிரபல
பாடகர்கள் திவாகர், தன்யஸ்ரீ குரல்களில
இசைஞானி இளையராஜாவின் பாடல்களை கேட்டு, பாடி இரசித்திட வாரீர்...



HOSPITALITY PARTNERS · FOOD & BEV PARTNERS · TRAVEL PARTNERS · PRINT MEDIA PARTNERS · FM MEDIA PARTNERS · VIDEOGRAPHY PARTNERS · PHOTOGRAPHY PARTNERS · D-MEDIA PARTNERS · CREATIVE PARTNERS · GIFTS PARTNERS · SNACKS PARTNERS

## 'செல்லக்கிளிகள்' முன்பள்ளி ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 23

செல்லக்கிளிகள் முன்பள்ளியின் முதலாவது ஆண்டு நிறைவு விழா திருநெல்வேலி கிழக்கு வாலையம்மன் சனசமூக நிலைய மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

சனசமூகநிலையத் தலைவர் சண்முகநாதன் பிரசன்னா தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் யாழ்.கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப்பணிப்பாளர் தம்பிராசா சிவகுமார் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். (ச-25,66)

## குருதிக்கொடை முகாம்

யாழ்ப்பாணம், மார்ச் 23

இளவாலை சென் யூட் ஆலய இளைஞர் கழகத்தின் ஏற்பாட்டில், குருதிக்கொடை முகாம் நிகழ்வு இளவாலை சென் யூட் ஆலய மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் பி.ப. 2 மணிவரை இடம்பெறவுள்ளது. (ச-25,66)

## பிறப்புச்சான்றிதழ் அற்றோர் பருத்தித்துறையில் அதிகரிப்பு

### நடமாடும் சேவை நடத்தத் தீர்மானம்

யாழ்ப்பாணம், மார்ச் 23

யாழ். மாவட்டச் செயலகத்தின் 15 பிரதேச செயலர் பிரிவுகளிலும் பருத்தித்துறைப் பிரதேசத்திலேயே அதிகளவு பிறப்புச் சான்றிதழ் அற்ற முறைமைகள் பதிவுசெய்யப்படுவதாக வடக்கு வலயப் பிரதிப் பதிவாளர் நாயகம் பிரபாகரன் தெரிவித்துள்ளார். யாழ் மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுக்கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது மருதங்கேணி, பருத்தித்துறை, கரவெட்டி ஆகிய மூன்று பிரதேச செயலகங்களையும் இணைத்து எதிர்வரும் மே மாதம் 16 ஆம் திகதி நடமாடும் சேவை ஒன்றை நடத்துமாறு யாழ். மாவட்ட பதில் செயலர் ம.பிரதீபன் தெரிவித்துள்ளார். (ச-25,125)

Empowering Global Health
Stay Super
Beat Diabetes




GINSOMIN®
அத்தியாவசியமான 19 விற்றமின்கள் மற்றும் தாதுக்களுடன் கூடியது
உணர்திறனை அதிகரிக்கவும், உடலில் இன்சுலின் எதிர்ப்பைக் குறைக்கவும் மருத்துவ ரீதியாக நிரூபிக்கப்பட்டுள்ளது
MEGA We care For Your Wellness WWW.megawecare.lk
0114 375 364 | 077 34 100 71
Available in supermarkets & pharmacies island wide
Imported and Distributed by : A Baur & Company (Pvt.)Limited



வரலாற்றுப் பிரசித்திபெற்ற மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருந்திருவிழா நேற்றுச் சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. தொடர்ந்தும் 25 தினங்கள் மஹோற்சவப் பெருந்திருவிழா காலை, மாலை உற்சவங்களாகச் சிறப்பாக நடைபெறவுள்ளன. (ச-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



கடந்த 03.04.2024 புதன்கிழமை
அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

**அமரர்
சண்முகம்
பாலகிருஸ்ணன்**

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு நாள் நாளை (24.03.2025) திங்கட்கிழமை எமது இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்ம சாந்தி கிரியைகளிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பஞ்சவிகேசன் வீதி,
இராக்கச்சி அம்பாள் கோவிலடி,
சங்கத்தானை, சாவகச்சேரி.

குடும்பத்தினர்

(CR/44637) J-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 27 . 03 . 1968



மறைவு 20 . 03 . 2025

### சின்னத்தம்பி சௌந்தரராஜா

வேதவுடையார் வளவு மல்லாகத்தை பிறப்பிடமாகவும், இளவாலை சீந்திப்பந்தலை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சௌந்தரராஜா அவர்கள் கடந்த (20.03.2025) வியாழக்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார். அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - நாகம்மா தம்பதியின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பரமலிங்கம் - தங்கம்மா தம்பதியின் அன்பு மருமகனும் , தனபாக்கியம் (தயா) அவர்களின் அன்பு கணவரும், செல்வமலர், மனோரஞ்சிதமலர், இராசமலர் (ஜேர்மன்), புஷ்பமலர் , காலஞ்சென்ற சண்முகராசா மற்றும் செல்வராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும், அஜந்தா (ஜேர்மன்) அஜிதா, டானியல், அனிஷ்ரா, டான்சன், ஆகியோரின் அன்புத் தந்தையும், அருள்(கனடா), திலீபன் (ஜேர்மன்), ஆகியோரின் பாசமிகு மாமனரும், அனனியா, அர்வின், அதித், அகில் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார் .

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை ( 24.03.2025) திங்கட்கிழமை முற்பகல் 9:00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று அஞ்சலிக்காக முற்பகல் 11.00 மணியிலிருந்து நண்பகல் 12.00 மணிவரை கல்லாரை மல்லாகம் வளர்மதி சனசமுகம் நிலையத்தில் வைக்கப்பட்டு பூதவுடல் நல்லடக்கத்திற்காக சீந்திப்பந்தல் இளவாலை சேமக்காலில் அடக்கம் செய்யப்படும். இவ்வவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சீந்திப் பந்தல்,
இளவாலை

தகவல் : குடும்பத்தினர்
076 893 6410
077 690 4924

## மரண அறிவித்தல்

மலர்வு 09 . 03 . 1933



உதிர்வு 18 . 03 . 2025

### திரு. ஜெயரட்ணம் ஜெயதேவன்

(ஓய்வூதியர் - மாவட்ட செயலகம் யாழ்ப்பாணம் பிரதம எழுதுவினைஞர்)

உரும்பிராயை பிறப்பிடமாகவும் நீர்வேலி வடக்கு, ராஜ வீதியை வசிப்பிடமாகவும் தற்போது பிரான்ஸை வாழ்விடமாகவும் கொண்ட திரு.ஜெயரட்ணம் ஜெயதேவன் அவர்கள் கடந்த (18.03.2025 ) செவ்வாய்க்கிழமை பிரான்ஸ் பரீசில் இல் காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான ஜெயரட்ணம் - றோசம்மா தம்பதியின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான முத்தையா - செல்லம்மா தம்பதியின் அன்பு மருமகனும், பாலாம்பிகையின் அன்புக் கணவரும், உருத்திரன் (பிரான்ஸ்), சுபேந்திரன்(கனடா) அவர்களின் அன்புத் தந்தையும், கீதா (பிரான்ஸ்) அவர்களின் அன்பு மாமனாரும், ஜெயமணி, ஜெயராணி, ஜெயசோதி, ஜெயலக்ஷ்மி ஆகியோரின் அன்புச் சகோதரரும், Dylan, Ryann. Diviya, Dilshan, Dilo ஆகியோரின் அன்பப் பேரனுமாவார்.
அன்னாரின் பூதவுடல் இன்று (23.03.2025, இற்கும் 30.03.2025 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணியிலிருந்து 4.00 மணிவரை 95 rue Marcel Sembat, 93430 Villetaneuse இடத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டு. பின்னர் அன்னாரின் இறுதிக்கிரியைகள் (01.04.2025) செவ்வாய்க்கிழமை காலை 8.45 முதல் 11.15 மணிவரை நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 12.30 முதல் 01.30 மணியளவில் தகனம் செய்யப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

உருத்திரன் - 0033 066 429 8286 (பிரான்ஸ்)
கீதா - 0033 065 003 8830 (பிரான்ஸ்)
:சுதன் - 0014 375 668 636 (கனடா)
யசோ மாலா- 0033 060 974 3373 (பிரான்ஸ்)


தகவல்:
குடும்பத்தினர்

(CS/57788) J-1

## மரண அறிவித்தல்

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

தோற்றம் 12 . 01 . 2008



மறைவு 21 . 03 . 2025

### செல்வி சன்ஷிகா ராஜேஸ்கண்ணா

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும், கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி சன்ஷிகா ராஜேஸ்கண்ணா நேற்று முன்தினம் (21.03.2025) வெள்ளிக்கிழமை அகாலகாலமானார்.
அன்னார் ராஜேஸ்கண்ணா - அனோஜா தம்பதியின் அன்பு மகளும், காலஞ்சென்ற சிவராஜா மற்றும் உமாதேவி, சண்முகசுந்தரம், புஸ்பராணி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் லதிஸ்கா ,சியாராவின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற சுபாஷன் மற்றும் செல்வி, மனோகர்-தர்சிகா ஆகியோரின் மருமகளும், பாபு, சிந்துஜா, நிறோஜா ஆகியோரின் அன்புப் பெறாமகளும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.03.2025) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இல- 19 முத்தட்டுமடம் வீதி
கோண்டாவில் மேற்கு (கே.கே.எஸ் வீதி
யாழ்ப்பாணம்

(CS/57808) Su-1

தகவல் :
குடும்பத்தினர்
076 199 2922, 076 662 3641

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடப்புச் சம்பியன் கொல்கத்தாவை தோற்கடித்தது றோயல் சலஞ்சர்ஸ்!

ஐ.பி.எல். தொடரில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டத்தில் நடப்புச் சம்பியன் கொல்கத்தாவை மிக இலகுவாகத் தோற்கடித்தது பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ்.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா அணிக்கு ஆரம்ப வீரர் குயின்டன் டிஹொக் 4 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றினார். நரைன் மற்றும் ரகானே இணைந்து அணியைச் சரிவிலிருந்து மீட்டனர். இணைப்பாட்டமாக 100 ஓட்டங்கள் பகிரப்பட்ட பின்னர் 44 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் நரைன். அரைச்சதம் கடந்திருந்த ரகானே 56 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்ததைத் தொடர்ந்து, விக்கெட்டுக்கள் சரியத் தொடங்கின.

கொல்கத்தா அணியின் மத்திய வரிசைப் பலமான ரிங்குசிங் 12 ஓட்டங்களுடனும், ரசல் 4 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தைத் தொடர்ந்து முடிவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 174 ஓட்டங்களை கொல்கத்தா அணி பெற்றது.

பந்துவீச்சில் குருனல் பாண்டியா 29 ஓட்டங்களை மட்டுமே விட்டுக்கொடுத்து 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.



பதிலுக்குக் களமிறங்கிய பெங்களூர் அணிக்கு, ஆரம்ப வீரர்கள் இருவரும் வெற்றியை உறுதிப்படுத்தினார்கள். பில் ஷோல்ட் மற்றும் விராட் கோலி இருவரும் புயல் வேகத்தில் ஆடிக் கொண்டிருந்தனர். 8.3 ஓவர்களில் அணி 95 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில், 56 ஓட்டங்களுடன் பில் ஷோல்ட் ஆட்டமிழந்தார். படிக்கல் 10 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினாலும் எந்தப் பதற்றமும் ஏற்படவில்லை. கோலியும், படிதாரும் சிறப்பாக விளையாடி ஆட்டத்தை வெற்றியுடன் முடித்து வைத்தனர். கோலி ஆட்டமிழக்காமல் 59 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். (ம)

### இன்றைய மோதல்கள்

RAJASTHAN ROYALS VS SUNRISERS

ராஜஸ்தான் — ஹைதராபாத்

மாலை 3.30 மணி

### இன்றைய மோதல்கள்

MUMBAI INDIANS VS CHENNAI SUPER KINGS

மும்பை — சென்னை

இரவு 7.30 மணி

## முதுகில்...

திஸ்ஸ விகாரைப் பகுதியில் கள ஆய்வுகளை மேற்கொண்டு பிரச்சினை நிவர்த்திசெய்யப்படும் என்று பௌத்தசாசன அமைச்சர் சுனில் செனவி அறிவித்திருந்த நிலையில், அங்கு அமைக்கப்பட்டுள்ள மற்றைய சட்டவிரோதக் கட்டடம் இன்று திறந்துவைக்கப்படுகின்றமை பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

தையிட்டியில் திஸ்ஸ விகாரைக்கு மேலதிகமாக, அந்தப் பகுதியில் மிக இரகசியமான வகையில் வேறுசில சட்டவிரோதக் கட்டடங்கள் அமைக்கப்பட்டுவந்தன. இராணுவத்தினர் இந்தப் பணிகளில் மும்முரமாக ஈடுபட்டு வந்தனர். இதை உதயனின் ஊடகப் புலனாய்வு அணி கடந்த வருடம் மே மாதம் 31ஆம் திகதி வெளிப்படுத்தியிருந்தது. அது தொடர்பான ஒளிப்படங்களும் உதயனில் வெளியிடப்பட்டிருந்தன.

அதற்கு அப்போதைய பதில் மாவட்டச் செயலரும், தற்போதைய மாவட்டச் செயலருமான மருதலிங்கம் பிரதீபன் மறுப்புத் தெரிவித்திருந்தார். தான் சம்பவ இடத்தைப் பார்வையிட்டதாகவும், அவ்வாறான சட்டவிரோதக் கட்டடங்கள் எவையும் இல்லை என்றும் அவர் கூறியிருந்தார். ஆனால், உதயனின் ஊடகப் புலனாய்வு அணி சுட்டிக்காட்டியதைப் போன்று, இராணுவத்தால் அமைக்கப்பட்டுவந்த அந்த சட்டவிரோத பௌத்த ஆக்கிரமிப்புக் கட்டங்களே இன்று மத வழிபாடுகளுக்குப் பின்னர் கையளிக்கப்படவுள்ளன. அந்தக் கட்டடங்கள் பிக்குகள் தங்குவதற்கான மடாலயமாக இருக்கலாம் என்று நம்பப்படுகின்றது.

'தையிட்டி திஸ்ஸ விகாரை விவகாரம் மிகவும் பாரதூரமானது. தமிழ் மக்களின் காணிகள் அங்கு ஆக்கிரமிக்கப்பட்டிருக்கின்றன என்பதை மறுப்பதற்கில்லை' என்று அமைச்சர் சந்திரசேகர் வெளிப்படையாக ஏற்றிருந்தார். அத்துடன், 'தையிட்டியில் மூன்று திஸ்ஸ விகாரைகள் உள்ளன. இவை தொடர்பில் ஆழமான பரிசீலனைகள் முன்னெடுக்கப்படும். உரிய கள ஆய்வின் பின்னர் பிரச்சினைக்கு சுமூகமான தீர்வு வழங்கப்படும்' என்று பௌத்த சாசன அமைச்சர் சுனில் செனவியும் கூறியிருந்தார்.

ஜனாதிபதி அநுரவும், 'மக்களின் காணிகள் மக்களுக்கே வழங்கப்படும்' என்றும் வாக்குறுதியை வழங்கியிருந்தார். இவ்வாறிருக்கையில், திஸ்ஸ விகாரைக்கு மேலதிகமாக வேறுசில கட்டடங்கள் அங்கு திறக்கப்படுகின்றமை தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கையாலாகாத தன்மையை வெளிப்படுத்துவதாக பலரும் விமர்சித்துள்ளனர்.

புதிதாக அமைக்கப்பட்ட கட்டடத்தையே தடுத்துநிறுத்துவதற்குத் திராணியற்ற இந்த அரசாங்கம், எவ்வாறு திஸ்ஸ விகாரையை அப்புறப்படுத்தி, மக்களின் காணிகளை மக்களுக்கு உரியதாக்கும் என்ற கேள்விகளும் எழுப்பப்பட்டுள்ளன. (அ-ம-26)

## டீசல்...

மென்பானப் போத்தலில் ஊற்றிவைத்திருந்த நிலையில், அந்தக் குழந்தை அதை மென்பானம் என நினைத்து கடந்த 18ஆம் திகதி அருந்தியுள்ளது. இதையடுத்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த அந்தக் குழந்தை சிகிச்சையின்போது நேற்று உயிரிழந்துள்ளது.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந. பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26-23)

## மூர்க்கம்...

பருத்தித்துறைப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தும்பளை மூர்க்கம் கடற்கரை ஊடாக கஞ்சா கடத்தல் இடம்பெறவுள்ளதாக இராணுவப்புலனாய்வுப் பிரிவினருக்குத் தகவல் கிடைத்துள்ளது. அந்தத் தகவலுக்கு அமைவாக முன்னெடுக்கப்பட்ட விசேட நடவடிக்கையின்போதே கஞ்சா கடத்தல் முறியடிக்கப்பட்டுள்ளது.

இரகசியத்தகவலுக்கு அமைவாக பருத்தித்துறைப் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் இணைந்து மூர்க்கம் கடற்கரைப் பகுதியில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இரவு மறைந்திருந்துள்ளனர். இதன்போது நேற்று சனிக்கிழமை அதிகாலை 3.30 மணியளவில் கடல்வழியாகக் கடத்திவரப்பட்ட கேரளக் கஞ்சாவுடன் சிலர் உட்பிரவேசித்தபோதே பொலிஸாரும் இராணுவத்தினரும் அவர்களைச் சுற்றிவளைத்துக் கைது செய்ய முற்பட் டுள்ளனர். எனினும், கடத்தலில் ஈடுபட்ட ஒருவரையேனும் கைதுசெய்யமுடியவில்லை.

சந்தேகநபர்கள் தப்பிச்சென்றுள்ள நிலையில், 154 பொதிகளில் காணப்பட்ட சுமார் 300 கிலோக்கிராமுக்கு மேற்பட்ட கஞ்சாவும், கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட படகு மற்றும் வெளியிணைப்பு இயந்திரம் என்பனவும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

அந்தப் பகுதியில் மேலதிகமாக கஞ்சாப் பொதிகள் பதுக்கிவைக்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் பொலிஸார் மோப்பநாய்கள் தேடுதல்களை மேற்கொண்டுவருகின்றனர். பருத்தித்துறை பொலிஸ் நிலைய தலைமைப் பொறுப்பதிகாரி பிரியந்த அமரசிங்க சம்பவ இடத்துக்கு நேரடியாகச் சென்று நிலைமைகளை ஆராய்ந்தார்.

(அ-ம-26-100-27-28-20-66)

## பெறுமதியான...

மின்கலங்களைத் தொடர்ச்சியாகத் திருடிவந்த முன்னாள் கடற்படைச் சிப்பாய் உள்ளிட்ட ஐந்து பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கோப்பாய் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின்போதே சந்தேகநபர்கள் ஐந்துபேரும் அம்பாறைப் பகுதியில் வைத்துக் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களில் ஒருவர் அந்த மின்கலன்களைக் கொள்வனவுசெய்த கடையின் உரிமையாளர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த மின்கலன்கள் ஒவ்வொன்றும் [illegible] பெறுமதியானவை. சந்தேகநபர்களிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன என்றும் பொலிஸார் மேலும் கூறியுள்ளனர். நீதிமன்ற உத்தரவுக்கு அமைய அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

(அ-ம-26)

## காஸா...

அறிவித்துள்ளது. இது தொடர்பில் இலங்கை வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

காஸாவில் நிலவும் நிலைமை குறித்து இலங்கை ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது. மேலும் நிலைமையை மோசமாக்கும் எந்தவொரு நடவடிக்கைகளையும் தவிர்க்குமாறு அனைத்துத் தரப்பினரையும் கேட்டுக்கொள்கிறது. விரைவில் அந்தப் பகுதியில் நிலையான அமைதி நிலைநாட்டப்படும் என்று நாங்கள் நம்புகிறோம் - என்றுள்ளது. (அ-ம-இ)

## ஹெரோய்னுடன்...

மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் போதே அந்த நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரிடம் இருந்து 2 கிராம் 35 மில்லிக்கிராம் ஹெரோய்ன் மீட்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர் யாழ்ப்பாணம் மேலதிக நீதவான் லெனின்குமாரின் முன்னிலையில் நேற்று முற்படுத்தப்பட்டார். அவரை ஏப்ரல் மாதம் 4ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். (அ-ம-26)

## டிப்பர்...

னர். இதன்போது ஈச்சளவக்கை கிராமத்தைச் சேர்ந்த நபரே சம்பவ இடத்தில் உயிரிழந்தார். காயமடைந்த ஏனைய மூவரும் மன்னார் மாவட்ட மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளை அடம்பன் பொலிஸார் முன்னெடுத்து வருகின்ற னர். (அ-ம-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உக்ரைனில் பிரிட்டன் இளவரசர்

கீவ், மார்ச் 23

பிரிட்டன் இளவரசர் வில்லியம் உக்ரைனுக்குப் பயணம் மேற்கொண்டுள்ளார். அவர் ரஷ்ய எல்லைவரை இராணுவ உடையில் சென்று உக்ரைன் இராணுவத்தினருடன் கலந்துரையாடல் நடத்தியுள்ளார். (ம)


## தென்னந் தோட்டக்காணி விற்பனைக்கு

பச்சிலைப்பள்ளி பளைப் பிரதேசத்தில் 40 ஏக்கர் வளமான தென்னைக்கு உகந்த காணி விற்பனைக்கு உண்டு. பகுதியாகவும் பெற்றுக் கொள்ளலாம். விலை பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:- Whatsapp:- 0044 740 537 3526

(CS/57780) J-1

## காணி விற்பனைக்கு

கௌதாரிமுனை பிரதான வீதியில் உள்ள ஒரு பக்கம் கடல் மறுபக்கம் உயர் மின் அழுத்த வடம் செல்லும் பிரதான வீதி கொண்ட 14.5 ஏக்கர் உறுதிக்காணி அவசர பணத்தேவை கருதி விற்பனைக்கு உள்ளது. விலை பேசித் தீர்மானிக்கலாம்.

077 736 8286, 076 635 6691

## காணி விற்பனைக்கு

பலாலி வீதி, திருநெல்வேலிச் சந்தைக்கு அருகாமையில் அமைந்துள்ள பலாலி வீதியிலிருந்து 40m தொலைவில் HNB வங்கிக்கும் Sunway Supermarket க்கும் மிக அருகில்

- வெட்டுக்கிணறு
- சுற்றுமதிலுடன் கூடிய
- ஒரு குடும்பம் வசிக்கக்கூடிய வீட்டுடன் 3 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

விலை பேசி தீர்மானிக்கலாம்.

தொடர்புகளுக்கு:- 077 774 2681, 077 690 1708

(CS/29898) J-1

## வீட்டுடன் காணி விற்பனைக்கு

இராஜேஸ்வரி வீதி, நாயன்மார் கட்டில் அமைந்துள்ள 1 பரப்பும் 9 குழியும் கொண்ட வீடும் காணியும் விற்பனைக்குண்டு.

077 656 9936

## வேலையாட்கள் தேவை

தென்மாகாணத்தில் அமைந்துள்ள பலசரக்கு கடை ஒன்றில் தங்கியிருந்து வேலை செய்யக்கூடிய ஆண் வேலையாட்கள் தேவை.

பில் கணக்கு போடக்கூடிய 50 வயதிற்கு மேற்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

சமைக்கக்கூடியவர்கள் (மதிய உணவு) விரும்பத்தக்கது. சம்பளம் - 60,000/-

077 480 3379

## 3 வீடுகள் வாடகைக்கு உண்டு

நல்லூர் கோவிலிருந்து 500 m தூரத்தில் 2 வீடுகள் 4 அறைகளுடன் மாதவாடகை 50000/- மற்றும் Brown Road இல் கீழ் மேல் 6 அறைகளுடன் மற்றும் 3 வாகன தரிப்பிடம் மாதவாடகை 120,000 /- வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 077 306 8993, 077 457 3266 077 401 6079

(cs.2775) (N-1)

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பம் (v) 1977ம் விவாகரத்தான 2 பிள்ளைகள் உள்ள மணமகனுக்கு மணமகள் தேவை. விவாகரத்தானவர்களும் விரும்பத்தக்கது.

தொடர்பு:- 070 413 0609

## காணி விற்பனைக்கு

55 New செம்மணி வீதி கல்வியங்காட்டில் 2 1/4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. **(கிணற்றுடன்)** - tube well, **நல்லூர் கோவில் 1.7 Km, கல்வியங்காடு சந்தி 350 m**

077 185 4870

(cs.57792) (J-1)

## கார் விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் நல்ல நிலையில் உள்ள 2017ம் வருட AQUA (3வது உரிமையாளர்) விற்பனைக்கு உண்டு. பார்வையிடும் நேரம் ஞாயிறு மு.ப 9.30 ற்கு மேல் தொடர்புகொள்ளவும்

தொடர்பு:- 077 833 7442

## பணியாளர்கள் தேவை

குளியலறை பொருட்கள், மாபிள் மற்றும் பிளம்பிங் பொருட்கள் விற்பனை செய்யும் வியாபார நிலையத்திற்கு பின்வரும் வேலைகளுக்கு பணியாளர்கள் தேவை.

**ஆண்கள் மட்டும்**

1. சாரதி
2. சிட்டை எழுதுநர் (கணினி அறிவுடையவர்கள் விரும்பத்தக்கது)
3. விற்பனை உதவியாளர்.

தொடர்பு:- 077 501 0821, 076 135 9300

(cs 57779) (N-1)

## பணிப்பெண் தேவை

யாழ்ப்பாணத்தில் சிறிய குடும்பம் ஒன்றுடன் தங்கி இருந்து வீட்டுவேலை செய்யக்கூடிய பணிப்பெண் தேவை.

- கவர்ச்சிகரமான சம்பளம், தங்குமிடம், உணவு, போக்குவரத்து வசதிகளும் உண்டு.
- 35 வயதிற்குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

075 880 7718

## அறை வாடகைக்குத் தேவை

யாழ் வைத்தியசாலையில் பணியாற்றும் பெண் வைத்தியருக்கு பாதுகாப்புடன் கூடிய அறை 6 மாதங்களுக்கு வாடகைக்குத் தேவை. வைத்தியசாலையில் இருந்து நடை தூரத்தில் விரும்பத்தக்கது.


077 078 4411, 075 078 4466


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

## மாதர் மகாலிங்கம்

**திதி- பங்குனி தேய்பிறை நவமி 23.03.2025**



ஊரார்க்கு உழைத்து வழிகாட்டி வாழ்ந்தீர்கள்
புதல்வர்கள் வாழ்வில் புத்தொளியை விதைத்தீர்கள்
உங்கள் உழைப்பினால் எம்வாழ்வு வளமாக ஆனதப்பா
அன்பாய் யாவர்க்கும் அறிவுரைகள் சொன்னீர்கள்
கண்டிப்பின்றி கலகலப்பாய் பல கதைகள் பகர்ந்தீர்கள்
வேரோடி வாழ்ந்த பெருந்தருவைப் போல
ஊருக்கே அன்று நிழலாக வாழ்ந்தீர்கள்
நீங்கள் விண்ணேறி ஆண்டொன்று கடக்கிறது
ஆண்டு ஒன்றென்ன ஆயிரமே கடந்தாலும்
உங்கள் செயலனைத்தும் மங்காத பெருமை பேசும்
எங்கள் இதயங்களில் என்றும் உங்கள்
நினைவுகள் வாழும்.

அன்னாரின் முதலாம் ஆண்டு ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வுகள் இன்று (23.03.2025) ஞாயிற்றுக்கிழமை மதியம் 12.00 மணியளவில் செல்வ மஹால் மண்டபத்தில் (இல. 1229, கே.கே.எஸ் வீதி, பூநாறி மரத்தடி, யாழ்ப்பாணம்) நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**ஓம் சாந்தி சாந்தி சாந்தி**

தோற்றம் **02.06.1944**

மறைவு **03.04.2024**

**ஆனைக்கோட்டை, யாழ்ப்பாணம்.**


**குடும்பத்தினர்**
**077 691 3133**

(CS/57794) SU-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தியேட்டி ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பு

தோற்றம்
13 . 08 . 1950



மறைவு
23 . 02 . 2025

கடந்த 23.02.2025 அன்று சிவபதமடைந்த
எங்கள் குடும்பத் தலைவர்
அமரர்
**வைத்திலிங்கம் தர்மபாலச்சந்திரன்** (அன்னப்பிள்ளை)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (24.3.2025) திங்கட்கிழமை அதிகாலை 5.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், வீட்டுக்கிருத்திய நிகழ்வு முற்பகல் 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும்.
ஆத்மசாந்திப் பிரார்த்தனை எதிர்வரும் 26.3.2025 புதனகிழமை முற்பகல் 10.00 மணியளவில் பன்னாலை வரத்தலம் கற்பக விநாயகர் மண்டபத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தாங்கள். தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்கு பிரார்த்திக்குமாறும். தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

மடத்தடி,
கொல்லங்கலட்டி.

குடும்பத்தினர்

(CR/44638) J-1

## பிரத்தியோக கணித வகுப்புகள்

தரம் 06 தொடக்கம் தரம் 11 வரை
நீண்டகால கற்பித்தல் அனுபவம் உள்ள ஆசிரியரினால் தனியாகவும், குழுவாகவும் வீடுகளிற்கு வந்து கற்பிக்கப்படும்.

தொடர்பு:- **074 259 5735**

(CS/57776) J-1

# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் உரும்பிராய் பகுதியில் 24 பரப்பு காணி விற்பனைக்குண்டு**

**நிலப்பரப்பு**

- பலாலி வீதியில் இருந்து 150 மீற்றர் தூரம்
- 20 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது
- உரும்பிராய் பெற்றோல் செற் முன் வீதியில் உள்ளது
- கட்டுக் கிணற்றுடன் சிறிய வீடும் உள்ளது
- பயன் தரும் தென்னைகள் உள்ளன
- நல்ல சுற்று சூழல் குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- நல்ல தண்ணீர் ஊற்று சூழல்
- ஒரு பரப்பின் விலை 64 லட்சம்
- தரகர் தேவையில்லை
- பார்வையிடும் நேரம்: காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை

தொடர்புகளுக்கு: **ஜெயம்**

**077 814 7389**
**077 986 5457**

(CS/57798) J-1

2 YEARS ANNIVERSARY

# சொந்தமண்ணில் சொந்தங்களுக்கான தெரிவு

எமது வெற்றிக்கு காரணமாகவுள்ள அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

## இரண்டாம் ஆண்டில் அடியெடுத்து வைப்பதை முன்னிட்டு

## மாபெரும் பரிசு மழை

- வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட நவீன Design களிலான புத்தம் புதிய
- பெண்களுக்கான சாறி வகைகள், சல்வார் வகைகள், பட்டுப்பாவாடைகள், டொப் வகைகள், மொடன் சட்டைகள்,
- சிறுவர்களுக்கான அனைத்து விதமான ஆடை வகைகள் மற்றும் ஆண்களுக்கான ஆடை வகைகள் அனைத்தையும் ஒரே கூரையின்கீழ் பெற்றுக்கொள்ளலாம்.



# சக்சஸ் வெயார்

SUXUS WEAR

New Clothes, New Fashion

இல: 102, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 2997
Suxuswear@gmail.com

(CR/44639) J-1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.03.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 08

சஞ்சீவி


Registered as a Newspaper

> தாழாத் தளராத் தலைநடுங்காத் தண்டூன்றா
> வீழா இறக்கும் இவள்மாட்டும் – காழ்இலா
> மம்மர்கொள் மாந்தர்க்கு அணங்காகும் தன்கைக் கோல்
> அம்மனைக்கோல் ஆகிய ஞான்று.
>
> – நாலடியார்

மலை : 34 | வள்ளுவர் ஆண்டு : 2055 | பங்குனி 9 | ஞாயிற்றுக்கிழமை (23.03.2025) | சிகரம் :137

# கதாநாயகர்கள் இல்லாத தமிழ்த் தேசிய அரசியல்?

நிலாந்தன்



கடந்த ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளரை நிறுத்திய மக்கள் அமைப்புக்கு புலம்பெயர்ந்த தமிழர் ஒருவர் பல்கலைக்கழக மாணவர் ஒருவரை அறிமுகப்படுத்தினார். அவர் பொதுவேட்பாளருக்கான அணியுடன் இணைந்து இயங்குவார் என்றும் சொன்னார். அந்த மாணவர் எதிர்பார்க்கப்பட்ட அளவுக்குத் துடிப்பாகச் செயற்படவில்லை என்று சம்பந்தப்பட்டவர்கள் தெரிவிக்கிறார்கள். எனினும் அவர் பொதுவேட்பாளருக்கு ஆதரவான நிலைப்பாட்டோடு காணப்பட்டார்.

இது பழைய கதை. அண்மையில் ஒரு'வட்ஸ் அப்' குழுவில் மேற்படி மாணவர் ஒரு காணொலியைப் பகிர்ந்திருந்தார். அநுரவை ஒரு கதாநாயகராகக் கட்டமைக்கும் விதத்தில் கவர்ச்சியாகத் தயாரிக்கப்பட்ட ஒரு காணொலி அது. அவர் ஏன் அதைப் பகிர்ந்திருக்கிறார் என்பதனை அறிவதற்கு பல்கலைக்கழகத்தில் அவருக்குக் கற்பித்த ஓர் ஆசிரியரிடம் கேட்டேன். அவர் சொன்னார்,"அந்த மாணவர் இப்பொழுது தேசிய மக்கள் சக்தியின் அமைப்பாளர்களில் ஒருவர் போல தோன்றுகிறார்" என்று. "ஜனாதிபதித் தேர்தலில் அவர் பொதுவேட்பாளரின் பக்கம் வந்தாரே?" என்று கேட்டேன்."அது அப்பொழுது. இப்பொழுது அவர் தேசிய மக்கள் சக்திக்கு வந்துவிட்டார். படிக்கும் காலங்களில் அவர் தீவிரமான தமிழ்த் தேசிய நிலைப்பாட்டை எடுத்து சக மாணவர்களோடு தர்க்கப்படுவார். ஆனால் படித்துமுடித்ததும் அவர் இப்பொழுது தேசிய மக்கள் சக்தியின் பக்கம் நிற்கிறார்" என்றும் அந்த ஆசிரியர் கூறினார்.

அந்த மாணவர் பகிர்ந்த காணொலியானது அநுரவை தமிழ் மக்கள் மத்தியில் ஒரு கதாநாயகராகக் கட்டமைக்கும் நோக்கத்தோடு தயாரிக்கப்பட்டிருக்கிறது. ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பிருந்தே அதுபோன்ற சிறிய காணொலித் துண்டுகள் பல வெளிவந்திருக்கின்றன. தேசிய மக்கள் சக்தியின் டிஜிட்டல் ப்ரோமோஷனக்கான அணி வினைத்திறனோடும் படைப்புத்திறனோடும் செயற்படுகின்றது. அநுரவை ஒரு கதாநாயக பிம்பமாகக் கட்டியெழுப்பும் நோக்கத்தோடு திட்டமிட்டு அவ்வாறான காணொலிகளை உருவாக்கிவருகிறது. அவற்றில் காணப்படும் தொழில்சார் திறன், கலைநயம் போன்றன அநுரவைச் சுற்றி ஓர் ஒளிவட்டத்தைக் கட்டமைக்கும் நோக்கமுடையவை.

ஒரு கதாநாயகராகக் கட்டியெழுப்பத் தேவையான முகம், உடல்வாகு, உடல் மொழி போன்றன அநுரவுக்கு உண்டு. அவற்றையும் சேர்த்து மாற்றத்தின் அலை ஒன்றுக்குத் தலைமைதாங்கும் கதாநாயக பிம்பமாக அவரைக் கட்டமைத்திருக்கிறார்கள்.

இந்த இடத்தில் தமிழ் நோக்குநிலையில் ஒரு முக்கியமான கேள்வியைக் கேட்கலாம். அநுரவைப் போல ஒரு கதாநாயகராகக் கட்டமைக்கத்தக்க அம்சங்களைக் கொண்ட தமிழ் தலைவர்கள், தலைவிகள் யாருமே இப்பொழுது களத்தில் இல்லையா? அல்லது அவ்வாறு கதாநாயக பிம்பங்களைக் கட்டியெழுப்பமுடியாத ஒரு சமூக, உளவியல், அரசியற் சூழல் தமிழ் மக்கள் மத்தியில் நிலவுகின்றதா?

இந்தக் கேள்விகளுக்கான விடைகளுக்குள் இருக்கிறது தமிழரசியலின் சீரழிவும் சாபக்கேடும். கடந்த 15ஆண்டுகளாக ஈழத்தமிழ் கூட்டு உளவியலானது கொந்தளிப்பானதாகவே காணப்படுகின்றது. கடந்த 15ஆண்டு கால தலைமைத்துவ வெற்றிடத்தில் தன்னைத் தானே தின்னும் ஒரு சமூகமாக; தானே தன்னை நம்பாத; ஒருவர் மற்றவரை சிறுமைப்படுத்துகின்ற; தன் பலம் எதுவென்று தெரியாமல் தூர்ந்துபோகும் ஒரு சமூகமாக ஈழத் தமிழ்ச் சமூகம்மாறி வருகின்றதா?

> **தங்களைக் கதாநாயகர்களாக அல்லது தியாகிகளாகக் கட்டமைப்பதற்காக தமது அரசியல் எதிரிகளை வில்லன்களாகச் சித்திரிக்கும் ஓர் அரசியல் பாரம்பரியமானது முடிவில் தமிழ்த் தேசிய அரசியல்வாதிகளில் அநேகம் பேரை சொந்த மக்களே நம்பமுடியாத வில்லன்களாக பார்க்கும் ஒரு பரிதாபதாபகரமான இடத்தில் வந்து நிற்கின்றதா?**

உளவியலில் Pistanthrophobia "பிஸ்டாந்ரோ போபியா" என்ற ஓர் ஆங்கிலப் பதம் உண்டு. அதன் பொருள், யாரையும் நம்புவதற்கு பயம். இறந்தகாலத்தில் ஏற்பட்ட எதிர்மறையான, கசப்பான அனுபவங்களின் விளைவாக மற்றவர்களை நம்பத் தயாரற்ற எரிச்சலுடன் கூடிய பயம். (An irritating fear of trusting others, typically resulting from previous negative experiences) போருக்குப் பின்னரான கூட்டு மனவடுக்களின் போதும் இதுபோன்ற உளவியல் விளைவுகளைக் காணமுடியும் என்று மருத்துவர்கள் கூறுகிறார்கள்.

இவ்வாறு கூட்டுக் காயங்கள், கூட்டு மனவடுக்களுக்குள் அழுந்திக்கிடக்கும் ஒரு சமூகத்தின் கொந்தளிப்பான கூட்டு உளவியலுக்குத் தலைமைதாங்கும் அரசியலானது ஒரு விதத்தில் கூட்டுச் சிகிச்சையாக அமையவேண்டும். அதை ஒருவிதத்தில் குணமாக்கல் செயற்பாடு என்று கூடச் சொல்லலாம். அவ்வாறு இறந்தகாலத்தின் கூட்டுக் காயங்களுக்கும் கூட்டு மனவடுக்களுக்கும் கூட்டுச் சிகிச்சையாக அமையவல்ல ஓர் அரசியலுக்குத் தலைமை தாங்கும் சக்திமிக்க தலைவர்கள் தமிழ் மக்கள் மத்தியில் இல்லையா? அல்லது இருப்பவர்களை மேலெழவிடாமல் ஒருவர் மற்றவரைக் கடித்துத் தின்னும் அல்லது ஒருவர் மற்றவரை சிறுமைப்படுத்தும் அல்லது மேலெழ முயற்சிப்பவரின் காலைப் பிடித்து இழுத்துவிழுத்துகின்ற ஒரு சமூகமாக தமிழ்ச் சமூகம் மாறிவருகின்றதா? அதனால்தான் தமிழ் அரசியலில் கதாநாயக பிம்பங்களைக் கட்டமைக்க முடியவில்லையா?

அரசியலில் கதாநாயக பிம்பங்களை கட்டமைப்பது என்பது தனிமனித துதிக்கும் தலைமை வழிபாட்டுக்கும் வழிவகுக்கும் என்ற விமர்சனங்களை இந்தக்கட்டுரை ஏற்றுக்கொள்கிறது. ஆனால் வாக்கு வேட்டை அரசியலில் ஜனவசியம் மிக்க பிம்பங்களுக்கு முக்கியத்துவம் உண்டு. அதுவும் டிஜிட்டல் ப்ரோமோஷனின் காலத்தில் அந்த முக்கியத்துவம் பல மடங்கு அதிகம். அதைவிட முக்கியமாக, சுமார் 15 ஆண்டுகளாக தலைமைத்துவ வெற்றிடத்துள் அழுந்திக்கிடக்கும் ஒரு சமூகத்தை அதன் அடுத்தகட்ட அரசியலுக்கு பண்புரு மாற்றம் செய்வதற்கு அவ்வாறான தலைமைகள் அவசியம். ஆனால் அப்படிப்பட்ட தலைமைகள் மேலெழமுடியாத அளவுக்கு தமிழ்த் தேசிய அரசியலின் கூட்டு உளவியலானது சிதைந்துபோய்க் கிடக்கின்றது.

ஐக்கியத்துக்காக உழைப்பவர்களை இந்தியாவின் ஏஜெண்டுகள் என்று கூறும் அளவுக்கு பிஸ்டாந்ரோ போபியா ஒரு சமூக அரசியல் நோயாக மாறிவிட்டது. ஐக்கியப்படுமாறு கேட்பவர்களை எதிரியின் ஆட்கள் என்று முத்திரைகுத்தும் நோய் ஈழத்தமிழர்கள் மத்தியில் மட்டும்தான் உண்டா?

தமிழ்த் தேசிய அரசியலில் வெறுப்பர்களை அதிகம் உற்பத்தி செய்த ஒரு கட்சியாகிய தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியானது கடந்த தேர்தலில் ஏற்பட்ட தோல்விகளின் பின் ஞானம் பெற்று கொள்கை வழி ஐக்கிய முயற்சிகளில் இறங்கியிருப்பதை ஒரு திருப்பகரமான மாற்றம் என்றே வர்ணிக்க வேண்டும்.

ஆனால் கொள்கை எது? ஒரு மக்களை அவர்கள் மத்தியில் இருக்கக்கூடிய பலம், பலவீனங்களோடு ஒரு திரளாகக் கூட்டிக்கட்டுவதுதான் தேசியவாத அரசியல். ஒரு தேசம் என்பது புனிதர்களுக்கு மட்டுமல்ல. ஒரு தேசத்துக்குள் தியாகிகள் மட்டும் இருப்பதில்லை. நல்லவர்கள், கெட்டவர்கள், புனிதர்கள், கபடர்கள், நயவஞ்சகர்கள், மனம் திருந்தியவர்கள், மனம் திருந்தாதவர்கள், விலைபோனவர்கள், ஒத்தோடிகள், எதிர்த்தோடிகள், மறுத்தோடிகள் என்று எல்லா ஓட்டங்களும் ஒரு சமூகத்துக்குள் இருக்கும். அந்த எல்லா ஓட்டங்களையும் ஒரு பொது எதிரிக்கு எதிரான பேரோட்டமாக மாற்றுவதுதான் தமிழ்த் தேசிய அரசியல். கடந்த 15 ஆண்டுகளாக அதைச் செய்யத்தமிழ் தேசியக் கட்சிகளால் முடியவில்லை.

07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடகவியலாளர்களை குறிவைத்து வேட்டை

(சென்றவாரத் தொடர்ச்சி)

## யசிகரன், வளர்மதி கைது

**திசநாயகத்துக்கு 20 வருட தண்டனை**

மேல் நீதிமன்றத்தில் திசநாயகத்தின் வழக்குத்தொடர்பான தீர்ப்பு வழங்கப்பட இருந்தது. அன்று பெருந்திரளான மக்கள், உள்நாட்டு வெளிநாட்டு ஊடகவியலாளர்கள்,பல வெளிநாட்டுத் தூதுவராலயத்தைச் சேர்ந்த பிரதிநிதிகள் என நூற்றுக்கணக்கானோர் திரண்டிருந்தனர்.

திசநாயகத்துக்கு எதிரான வழக்கில் சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகள் அனைத்தும் நியாயமான சந்தேகத்துக்கு அப்பால் அரசதரப்பால் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன. எனவே ஒவ்வொரு குற்றச்சாட்டுக்கும் தலா ஐந்து வருடம் வீதம், நான்கு குற்றச்சாட்டுகளுக்கும் இருபது வருட தண்டனை விதிப்படுகின்றது. நீதிபதி தீர்ப்பை வாசிக்க, நீதிமன்றமே ஒரு கணம் நிசப்தமானது.

இந்தத் தீர்ப்பை கேள்விப்பட்டு அதிர்ச்சியும் கலக்கமுமடைந்த யசிகரனும் வளர்மதியும் தங்கள் வழக்கின் மீது முழு நம்பிக்கையையும் இழந்துவிட்டனர். இதே முடிவு தான் தங்களுக்கும் ஏற்படப் போகின்றது என கண்ணீருடன் கலங்கினர். அவர்களுடைய வழக்கைத் தொடர்ந்து நடத்துகையில் யசிகரனுக்கும் வளர்மதிக்கும் ஆறுதல் கூறுவதே ஒரு பெரும் பாடாக இருந்தது. அவர்களுடைய மன வலிமையைச் சிதையாமல் காக்க கௌரி சங்கரி எடுத்துக்கொண்ட கரிசனை மிகவும் உணர்வுபூர்வமானது. யசிகரன் தனக்கு ஏற்பட்ட துன்பங்களாலும், வேதனைகளாலும் நம்பிக்கையைச் சிறிது இழந்திருந்தாலும் அமைதியான சுபாவம் கொண்ட வளர்மதி நம்பிக்கை இழக்கவில்லை. இந்நிலையில் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் சார்பாக யசிகரனின் சட்டவிரோத கைது, தடுத்துவைப்பு, சித்திரவதை என்ற பிரிவுகளின் அடிப்படையில் வழக்கினை விசாரணைக்கு எடுக்க நீதிமன்றம் திகதி குறிப்பிட்டது. யசிகரனை பரிசோதனைசெய்த சட்டமருத்துவர்களான மயூரதன் லோகநாதன் ஆகியோரின் சட்ட மருத்துவ அறிக்கை உயர்நீதிமன்றப் பதிவாளரினால் வரவழைக்கப்பட்டது





**அடிப்படை உரிமை மீறல் மனு மீளப்பெறல்**

உயர் நீதிமன்றத்தில் தாக்கல்செய்யப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளவிருந்த நிலையில், மேல் நீதிமன்றத்தில் யசிகரன், வளர்மதியின் மேலதிக விசாரணை 2009.10.13ஆம் திகதியன்று நடந்துகொண்டிருந்தது. அப்போது உயர்நீதிமன்றில் யசிகரன் சார்பில் அரசுக்கு எதிராகத் தாக்கல் செய்த அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கை யசிகரன் மீளப்பெற்றுக் கொண்டால் யசிகரனுக்கும், வளர்மதிக்கும் எதிராகத் தாக்கல் செய்யப்பட்டு மேல்நீதிமன்றில் நடந்துகொண்டிருக்கும் வழக்கை அரசு மீளப்பெற்றுக்கொள்ளும் சூழ்நிலை உருவாகியது. (சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை நிரூபிக்க போதிய சாட்சியங்கள் இல்லையெனின் எந்த நிபந்தனையும் இன்றி அரசினால் எதிரிகள் விடுதலை செய்யப்படவேண்டும். ஆனால் இங்கே மீளப்பெறுவதற்கும் நிபந்தனை விதிக்கப்பட்டது)

உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவைத் தொடர்ந்து விசாரணை நடத்திக்கொண்டுசெல்லும் வேளையில் யசிகரனுக்குச் சார்பாக தீர்ப்புக் கிடைக்கப் படலாம். ஏனெனில் யசிகரன் தாக்கப்பட்டுச் சித்திரவதை செய்யப்பட்டமைக்குச் சான்றாகச் சட்ட மருத்துவ அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதேபோன்று மேல் நீதிமன்ற வழக்கிலும் யசிகரன் தாக்கப்பட்டது, சித்திரவதை செய்யப்பட்டது என்பது தெளிவான சாட்சியங்களோடு முன்வைக்கப்பட்டிருந்தன. குற்ற ஒப்புதல் வாக்குமூலம் சுயமாகப் பெற்றதாக அரசினால் எந்தச் சூழ்நிலையிலும் நிரூபிக்கமுடியாது. வழக்கின் முடிவுகள் சட்டத்தின்படி யசிகரனுக்கும், வளர்மதிக்கும் சார்பாக அமைந்திருந்தாலும் சிறையில் வாடும் யசிகரனதும், வளர்மதியினதும் நீண்ட தூர நன்மையைப் பார்ப்பதா அல்லது நீதி வெல்லவேண்டும் எனத் தொடர்ந்து வழக்கினைக் தொடர்ந்துகொண்டு நடத்துவதா? இதுதான் எம்முன் நின்ற பிரதான கேள்வி!

மேலும் வளர்மதி உளரீதியாக மட்டுமின்றி உடல்ரீதியாகவும் பாதிப்புக்குள்ளாகியிருந்தார். இரண்டாவது சத்திரசிகிச்சை அவருக்குச் செய்யவேண்டியிருந்தது. அத்துடன் யசிகரனின் தந்தை, சகோதரிகள், உறவினர்கள் பட்ட துன்பம், மேலும் முக்கியமாக கைதுசெய்யப்பட்ட காலத்திலிருந்து 20 மாதங்கள் வரையில் தொடர்ந்து பயங்கரவாத பொலிஸ் பிரிவிலும்சிறையிலும்தொடர்ந்து அடைக்கப்பட்டமை. இக்காரணங்களையெல்லாம் கருத்திற்கொண்டு யசிகரன், வளர்மதி சார்பாக உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்து விசாரணைக்கு வரவிருந்த அடிப்படை உரிமை மீறல் வழக்கை யசிகரன், வளர்மதி மற்றும் அவர்களின் இரத்த உறவுகளின் வேண்டுகோளையடுத்து வாபஸ் பெறுவதென நாங்கள் தீர்மானித்தோம்.

2009ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 26 ஆம் திகதி காலை மேல் நீதிமன்றில் வழக்கு நடைபெறவிருந்த வேளையில் உயர் நீதிமன்றத்தில் யசிகரன் ,வளர்மதி சார்பாக தாக்கல்செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு மீளப்பெறப்பட்டது.



(தொடரும்)

# போரின்

கவிதை

4



## வாணி

நீ பெரு நெருப்பில் என் வயிறு
பற்றிப்புகையும் அதனால்
வெந்து தேசம் எரியும் எரியும்..
பிஞ்சுக் குழந்தையாய்
நெஞ்சின் மீதேறி நான் நின்று
விளையாடி
நிலவுக்குச் சோறூட்டி
துள்ளித் திரிந்து முகம் புதைத்து
நெச்சைக் கிள்ளித் தள்ளி...
பஞ்சு மெத்தை என் தாயை..இன்று
காணாமல் போனவள் என்று....பெயர்வைத்தால்?
எந்தாய் முகம் நான் மறந்துவிட்டேன்
சோறூட்டிய தாய்
வாய் துடைத்து வருமுன்னே
காலன் போல் இருவர்
வந்து அவளைக் கொண்டுபோன
அந்த இரவை நான் மறக்கவில்லை
அவள் முகம் மறந்துபோனாலும்....
பிஞ்சுக்குழந்தையாக...
நெஞ்சு பதைக்க ... பாட்டியிடம்
என்னைப்பாரப்படுத்தி
என் அம்மா எங்கு போய் முடிந்தாள்.....
தாயில்லாக் குருவியாகத் தவிக்கும்...
இக்குருவி......சிறகைவிரிக்க...
தன் தாயைத் தேடித்தவிக்கும்.
என் நெஞ்சில் நினைவுண்டு...
நான் அவள் போல வளர்ந்து
நிலை தொடும் நிலைவந்தும்
அவள் நினைவுகள் வந்து வந்து மோதும்
நிலவும்....... ஊட்டாத நிலாச்சோறும்
என் குட்டி இதயத்தைக்
தட்டித் தட்டிக் கேட்கும் என்தாயை
அழைத்துப் போனவரை
என்
அம்மா வருவாளோ?

- ஆனந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துளி

விசும்பின் துளி வீழின் அல்லால்...







## புலமையாளர் பதில்



**கேள்வி: பனிப்பாறைப் பாதுகாப்பு என்றால் என்ன?**

*எஸ் . கவிதா கொக்குவில்*

**பதில் :** பனிப்பாறைகள் என்பது பனிப்பொழிவால் உருவான பெரும் பனித்திணிவுகளாகும். இவை உலகளாவிய நன்னீர் வளங்களில் மூன்றில் ஒரு பங்கைச் சேமித்து வைத்துள்ளன. பனிப்பாறைப் பாதுகாப்பு என்பது, பனிப்பாறைகள் வேகமாக உருகிமறைவதைத் தடுப்பதற்காகவும், காலநிலை மாற்றத்தின் தாக்கங்களை குறைப்பதற்கும் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளைக் குறிக்கும். இது நீர் வளப் பாதுகாப்பு, காலநிலை சமநிலை, மற்றும் கடல்மட்ட உயர்வைக் கட்டுப்படுத்தும் முயற்சிகளுக்கு அடிப்படையாகும்.

உலகம் முழுவதும் பனிப்பாறைகள் உருகி வருகின்றன. இதனால் இரண்டு முக்கிய பிரச்சினைகள் உருவாகின்றன.

1. நன்னீர்ப் பற்றாக்குறை - பனிப்பாறை உருகும் தண்ணீர் ஆறுகள், நீர்த்தேக்கங்கள், நிலத்தடி நீர் ஆகியவற்றை நிரப்புகிறது. இவை விவசாயம், குடிநீர், மற்றும் மின்சக்தி உற்பத்திக்குப் பயன்படுத்தப்படுகின்றன.
2. கடல்மட்ட உயர்வு - பனிப்பாறைகள் உருகுவதால் கடல் மட்டம் உயர்ந்து, கடலோர நகரங்கள் மற்றும் நாடுகள் புயல், வெள்ளம் போன்ற பேரழிவுகளுக்கு ஆளாகின்றன.

இமயமலைப் பனிப்பாறைகள் மற்றும் அவற்றின் பனி உருகி வரும் நீர் இந்தியா, நேபாளம், பங்களாதேஷ், பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் காணப்படும் ஜீவ நதிகளின் ஓட்டத்துக்கும் நிலைப்புக்கும் காரணமாக உள்ளது. இந்த நீர் கங்கை, பிரம்மபுத்திரா, சிந்து போன்ற முக்கியமான நதிகளை அடிப்படையாகக் கொண்டே தெற்காசியாவின் பெரும்பான்மை விவசாயம் நடைபெறுகிறது. பனிப்பாறையிலிருந்து உருகும் நீர் குறையும்போது:

1. பாசனத்திற்கான நீர் குறைபாடு ஏற்படுகிறது.
2. விவசாயக்குடும்பங்கள் வருமான இழப்புக்கு ஆட்படுகின்றன.
3. குடிநீருக்கும் தட்டுப்பாடு ஏற்படுகிறது

பனிப்பாறை உருகுவதைக் குறைக்கவேண்டுமானால் நாம் காலநிலைமாற்றத்தைக் கட்டுப்படுத்தவேண்டும் . பசுமைச் சக்தி, பசுமைப் போக்குவரத்து, மற்றும் குறைந்த காபன் உமிழ்வுப் போக்குகள் ஊக்குவிக்கப்படவேண்டும். கருங்காபன் (Black Carbon) உமிழ்வைக் குறைக்கவேண்டும். எமக்கேயுரித்தான நீர்வளங்களைப் பாதுகாக்கவேண்டும்.


பனிப்பாறைகளின் பாதுகாப்பானது ஓர் உலகளாவிய முயற்சியாகப் பரிசீலிக்கப்படவேண்டுமென்பதாலேயே இந்த வருடம் (2025) சர்வதேச பனிப்பாறை ஆண்டாக , ஐக்கிய நாடுகள் சபையினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

**கலாநிதி இசபெல்.**
*விஞ்ஞான அலுவலர், உலக பனிப்பாறை கண்காணிப்பு சேவை, புவியியல் திணைக்களம், சூரிச் பல்கலைக்கழகம், சுவிட்சலாந்து*

## நீர் மாசை எதிர்கொள்ள மாதிரி பசுமை நகர வலயங்கள்



தூய்மையான இலங்கைக் கருத்திட்டத்தின் கீழ் சூழல் மாசை எதிர்கொள்ள, நகரத்திட்டமிடலின் ஓர் அங்கமாக மாதிரி பசுமை நகர வலயங்களை உருவாக்கும் செயற்றிட்டம் தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக, கொலன்னாவ மற்றும் ஊறுகொடவத்த நகரப்பகுதிகள் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றன. அரச, தனியார், மற்றும் பொதுமக்களின் பங்குடன் இத்தகைய பசுமை நகரங்கள் உருவாக்கப்படவுள்ளதாக தூய்மையான இலங்கைச் செயலகம் தெரிவித்திருக்கிறது. வளி, நிலம் , நீர் ஆகியன மாசடைவதை எதிர்கொள்ளக்கூடிய வகையிலேயே இத்திட்டம் உருவாக்கப்படுகிறது.



நீரைக் கூருணர்வுமிகு வகையிலே முகாமை செய்தலானது பசுமை நகரங்களை உருவாக்குவதன் அடிப்படையாகும். இது நவீனத்துவம் மிக்கது மட்டுமல்ல, பசுமை நகர வாசிகள் பாதுகாப்பாக, சுபிட்சமாக வாழ்வதற்கும் அத்தியாவசியமானதாகும். நகர வாசிகளுக்கு ஆரோக்கியமான, இயற்கைநேய நகர வாழ்வியலை வழங்குவதும் அவர்களது பௌதிக மற்றும் உளவியல் நல்வாழ்வை ஊக்குவிப்பதுவுமே இச்செயற்றிட்டத்தின் அடிப்படை நோக்கங்களாகும்.

### கடந்த மாத அமர்வு:

# வெள்ளத்தை எதிர்கொள்ள இயற்கையின்கண் தீர்வா?

வடக்கின் இளம்நீர்வாண்மையாளர்கள் வட்டத்தின் கடந்தமாத அமர்வில் "நீரேந்து பரப்பின் ஒருங்கிணைந்த முகாமைத்துவத்தில் இயற்கையின்பாலான தீர்வுகளின் வகிபாகம்" பற்றிய முன்னளிப்பை ஐக்கிய இராச்சியத்தின் சூழலியல் மற்றும் நீரியல் நிறுவனத்தின் சிரேஷ்ட ஆய்வு விஞ்ஞானியான கலாநிதி பொன்னம்பலம் இராமேஸ்வரன் வழங்கியிருந்தார்.

ஏந்துபரப்பின் ஒருங்கிணைந்த முகாமைத்துவம் (Integrated Catchment Management - ICM) என்பது நீர் வளம் சார்ந்த உயிர்ப்பௌதிக சூழலின் முகாமைத்துவத்தைக் குறிப்பதாகும். இத்தகையதோர் அணுகுமுறையில் இயற்கையின்பாலான தீர்வுகளாக சுற்றுச்சூழலின் இயற்கை அம்சங்களைப்பேணி மேம்படுத்தும்போது அவை வெள்ளநீரைச் சேமிக்கவும், தேங்கியபின் வெளியேறும் நீரின் வேகத்தைத் தணிக்கவும் உதவுகின்றன.

இவ்வாறான இயற்கையின்பாலான தீர்வுகளின் முக்கியத்துவம், அவசியம், அவற்றின் அனுகூலங்கள், சூழற் தொகுதிகளின் நிலைத்திருப்பில் இவை கொண்டிருக்கும் வகிபாகம் தொடர்பான பல்வேறான தகவல்களை இவற்றின் வாயிலாக அவரால் செயற்படுத்தப்பட்ட சமீபகால ஆய்வுகளின் அடிப்படையில் தொகுத்துவழங்கியிருந்தார்.

இந்த இயற்கையின்பாலான தீர்வுகள், இன்றும் நாம் எதிர்கொள்ளும் நெருக்கடிகளான கால நிலை மாற்றம், உயிர்ப்பல் வகைமை இழப்பு, நீர்ப்பற்றாக்குறை, அனர்த்த அபாயங்கள் ஆகியவற்றை இயற்கைக்கு எதிராகவன்றி அதன்பாலாக எதிர்கொள்வதற்கு அவசியமானவையாகும். மனித நடவடிக்



கைகளால் சூழல் தொகுதிகள் தமது தரத்தை இழந்துபோகின்ற இன்றைய காலகட்டத்தில் , இயற்கைத் தொகுதிகளை மீளமைக்கவும் பாதுகாக்கவும், நிலைபேறான, செலவு விளைதிறன் மிக்க அணுகுமுறையை இவை வழங்கும் அதேவேளை சூழலுக்கும் மக்களுக்கும் பலதரப்பட்ட பயன்களை வழங்குகின்றன. மனித நல்வாழ்வுக்கும் பொருளாதார சுபிட்சத்துக்கும் அத்தியாவசியமான சுத்தமான வளி, நீர் சுத்திகரிப்பு, காபன் பதிப்பு, மகரந்தச் சேர்க்கை போன்ற சூழல் தொகுதிச் சேவைகளை இவை மேம்படுத்துகின்றன. காலநிலை மாற்றத்தின் விளைவுகளைத் தணிக்க உதவுவதோடு மட்டும் நின்றுவிடாது சூழல் தொகுதிகளின் உறுதித்தன்மை, உயிர்ப்பல்வகைமைக்கான ஆதரவையும் இவை வழங்குகின்றன. ஆதலினால் இவை மனித அபிவிருத்திக்கும் இயற்கையின் பேணலுக்கும் அவசியம் எனக் கருதப்படுகின்றன.

வெள்ள முகாமைத்துவத்தை ஏற்படுத்தவல்ல இயற்கையின்பாலான நுட்பங்களான நீர்க்கசிவை ஏற்படுத்தும் மரக்கூடல் தடுப்பணைகள், பொருத்தமான தாவரங்களை நடுதல், மண்முகாமைத்துவத்தை ஏற்படுத்தும் பொறிமுறைகள், நீரைத்தேக்கிவைக்கும் பகுதிகளை உருவாக்குதல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

குறிப்பாக நீர் முகாமைத்துவத்தில் இவ்வாறான இயற்கையின்பாலான அணுகுமுறைகளைக் கையாளும்போது அவை அந்தந்தச் சூழல்களுக்குப் பொருத்தமானவையாகவும், வன்மையான பொறியியல் அணுகுமுறைகளை விட மலிவானதாகவும் நிலைபேறானதாகவும் காணப்படுகின்றனன. இவற்றின் மூலம் நிலைபேறான சாதகமான விளைவுகளை அடையமுடிவதுடன், நீர் மற்றும் மண்ணின் தரத்திற்கும், சூழலின் உயிர்ப்பல்வகைமைப் பெருக்கத்திற்கும் பெரிதும் நன்மையளிக்கின்றது. அபிவிருத்தித் திட்டமிடலில் இயற்கையின்பாலான தீர்வுகளின் வகிபாகம் தவிர்க்கமுடியாததாகிவிட்டது. துரிதகதியில், திட்டமிடப்படாத அபிவிருத்தியை அடைந்து வரும் வட மாகாணத்திலே இத்தகைய தீர்வுகள்சார் உணர்திறன் ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடுகையில் சற்று அதிகமாகத்தான் தேவைப்படுகிறது. தனிநபர் தொட்டு நிறுவனங்கள், சமூகங்கள் வரை அனைத்து குழுமங்க ளும் தம்மை இயற்கையின்பாலான தீர்வுகள் தொடர்பில் சிறிதளவேனும் உணர்திறன் மிக்கவர்களாக மாற்றிக்கொள்ள முயற்சித்தால், செழுமைமிகு பிராந்தியமாக எம் மாகாணம் மாறும் என்பதில் எதுவித ஐயமுமில்லை. முயன்று தான் பார்ப்போமே!

*எதிர்வரும் ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதி துளியின் 13 ஆவது இதழ் உங்கள் கைகளை நாடிவரும். வடமாகாணத்து நீர்வளம் சார்ந்து உங்கள் கருத்துகளையும் கேள்விகளையும் அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:* **Water Security through Participatory Action Research (WASPAR) Project, Centre for Digital Epidemeology, Faculty of Medicine, University of Jaffna;** *மின்னஞ்சல்:* **water@univ.jfn.ac.lk**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நீர்வளத்தைத் தேடி....

## யாழ். பல்கலைக்கழக வஸ்பார் செயற்றிட்டம் பற்றிய மீள்பார்வை

கடந்த ஓராண்டு காலமாக, மாதந்தோறும் உங்கள் கரங்களில் தவழ்ந்த உதயனின் 'துளி' பக்கம், நீர்வளம் சார்ந்த கருத்துகளை, அனுபவங்களை, கதைகளை தாங்கிவந்திருக்கிறது. அதனை வடக்கின் இளம் நீர் வாண்மையாளர் வட்டத்தைச் சேர்ந்தோர் உதயனுடன் இணைந்து வெளியிட்டு வருகிறார்கள்.

எம் மக்களுக்கு அவர்களது நீர் எதிர்காலம் பற்றிய விழிப்புணர்வை தமிழிலே ஊட்டும் இம்முயற்சியும் இதனை ஒத்த நீர் வளம் பேணும் ஏற்பாடுகள் பலவும் ஒன்றிணைக்கப்பட்ட வகையிலே வஸ்பார் (WASPAR) எனும் நாமத்தோடு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் செயல் ஆய்வுத் திட்டமானது கடந்த ஐந்து ஆண்டுகளாக நடைபெற்றுவருகிறது. அரைத் தசாப்தத்தை எட்டியிருக்கும் இப்பயணத்தை மீள் நோக்கிப் பார்த்து மதிப்பிடும் ஒரு முயற்சியின் வெளிப்பாடாக வஸ்பார் செயற்றிட்டத்தினை வடிவமைப்பதிலும் அக்கறையோடு வழிநடத்துவதிலும் பங்காற்றிவரும் ஆதரவர், சுவீடன் நாட்டு தகைநிலைப் பேராசிரியர் நடராஜா ஸ்ரீஸ்கந்தராஜாவுடனான உரையாடல் இங்கே வினாவிடை பாணியில் கட்டுரையாக அமைகிறது.

**கே: இச் செயல் முனைப்பினை எதற்காக வடக்கில் மேற்கொள்ள யோசித்தீர்கள்?**

**ப:** ஏறத்தாழ ஆறு ஆண்டுகளுக்கு முன்னர் 2019 ஆம் ஆண்டின் முற்பகுதியில் வடமாகாணத்தின் நீர்வளப் பாதுகாப்பினை மையப் பொருளாகக் கொண்டு ஓர்ஆய்வுத் திட்டத்தினை மேற்கொள்வது பற்றி யாழ்ப்பாணபல்கலைக்கழகத்தில் ஒரு பகுதியினர் பேசிக்கொண்டிருந்த வேளை நானும் இலங்கைக்கு வந்திருந்தேன். ஐரோப்பிய நாடுகளில் இதே துறையில் முற்போக்கான சில பார்வைகளோடு உயர் கல்வியையும் நீர் முகாமைத்துவம் சார்ந்து சமூக ஈடுபாட்டுடனான ஆய்வுவழிநடத்திய எனது அனுபவங்களை யாழ். பல்கலைக் கழகத்தினரோடும் பகிர்ந்து கொண்டதன் பயனாக இங்கு திட்டமிடப்பட்ட ஆய்வு முயற்சியிலே என்னையும் இணைத்துக்கொண்டார்கள். அம் முயற்சியின் தொடக்கத்தில் மூன்று ஆண்டுகளுக்கான உலக வங்கியின் நிதியும் ஒதுக்கப்பட்டது.

மற்றைய மாகாணங்களுடன் ஒப்பிடுகையில் தனித்துவமான புவிச்சரிதவியல், மற்றும் நீரியல் தன்மைகளைக் கொண்ட வடமாகாணத்தின் நீர்வளம், அதிலும் குறிப்பாக யாழ்குடாநாட்டின் நிலத்தடி நீர்வளம், இயல்பாகவே விளிம்பு நிலையிலும் பருவ காலங்களுக்கு ஏற்ப நெருக்கடிகளைச் சந்திக்கும் ஒன்றாகவும் இருந்து வந்தமை எம் அனைவருக்கும் தெரிந்த விடயம்தான். ஆயினும், அண்மைக் காலத்தில் அதிலும் குறிப்பாக போருக்குப் பின்னரான காலத்தில் நீர்வளம் எதிர்கொள்ளும் அச்சுறுத்தல்கள் வெறுமனே நீர்வழங்கல் என்ற ஒற்றைப் புள்ளியில் வைத்துப் பார்த்து தீர்வு காணப்பட முடியாதவை என்பதையும் மக்களது அக்கறையும் ஈடுபாடும் இணைந்ததாக அவை நீண்டகால பார்வையுடன் தீர்மானிக்கப்படவேண்டியவை என்பதையும் இந்த ஆரம்ப ஆய்வுத்திட்டத்தின் அடிப்படை நிலையாகக் கொண்டு அதனை நீர் பாதுகாப்பு ( Water Security) என்ற அகன்ற பரப்பினுள் உள்ளடக்க நாம் முடிவு செய்தோம்.

சம காலத்திலே பரவலாகப் பேசப்பட்ட சுன்னாகம் நிலத்தடி நீர் மாசும் இரணைமடுக்குள நீர்ப்பகிர்வும் அத்தகைய நீர்ப் பகிர்வு முரண்பாடுகளின்போது தீர்மானங்களை அறிவுசார் வகையில் எட்டவேண்டிய அரச கட்டமைப்புகளும், அவற்றைக் கையாள்வதற்கான மனநிலை, உளவலு, துணிவுடனான ஆற்றல் மிக்க சமூகத் தலைமைகளும் நலிவாகவே இருப்பதும் தெளிவாகியது. எனவேதான் இவ்விடயத்தில் நிலவிய , நிலவிவருகின்ற வெற்றிடத்தை நிரப்பவேண்டிய தேவையும் அதற்கென இப்புதிய ஆய்வு முனைப்பு அணி திரட்டக் கூடிய வளமும் ஒன்றிணைவதின் சிறப்பும் அவசியமும் எமக்குத் தென்பட்டன. அதற்கமையவே தான் வஸ்பார் எனும் இவ்வாய்வுத் திட்டம் கடந்த அரைத் தசாப்தமாக சமூகத்தின் மத்தியில் இயங்கிவருகிறது.

**கே: அப்படியாயின் இச்செயல் முனைப்பின் தனித்துவமான சிறப்பம்சங்கள் எவை எனக் கூறுவீர்களா?**

**ப:** எல்லா வகையான பிரச்சினைகளையும் எப்போதும் போல எமது கையில் உள்ள கருவிகளோடு, எமக்குப் பரிச்சயமான எப்போதும் சரிவருகின்ற அணுகு முறைகளைப் பயன்படுத்தி அல்லது சரியான தீர்வுவரும் வரை சென்று தீர்த்துவிடலாம் என்ற நம்பிக்கையை இப்போதைக்கு ஒரு பக்கத்தில் ஒதுக்கி வைத்துவிடுவது இந்த அணுகு முறையின் தனித்துவமான பண்பாகும். இச் செயற்றிட்டமானது புதிய ஆய்வு அணுகுமுறைகள் , நுணுக்கங்களைக் கையிலெடுப்பதோடு, அவற்றுடன் தொடர்புடைய மக்கள், சமூக அங்கத்தவர்களையும் சேர்த்து இணைத்துப் பயணிக்கவும் வேண்டும் என்ற கோட்பாட்டுடனேயே முன்னெடுத்துச் செல்லப்படுகிறது.

இங்கு தேவைக்கேற்றபடி விஞ்ஞானமும் சமூகவியலும் இணையலாம். நீரியலும் பொருளியலும் சேர்ந்து பிரச்சினையை அணுகக்கூடும். அரச கட்டமைப்புகளின் போக்கில் மாற்றம் தேவையெனில் அரசறிவியலோ உளவியலோ முகாமைத்துவ அறிவோ சேர்க்கப்படவேண்டிவரலாம். ஆக மொத்தத்தில் தேவைப்படும் அறிவு கூறு போடப் படுவதற்குப் பதிலாக தேவைக்கேற்ற வகையில் கூட்டாகக் கட்டியெழுப்பப்படும். மக்களிடையே புழக்கத்தில் இருந்து மறைக்கப்பட்டு மறக்கப்பட்டு தொலைந்து கொண்டிருக்கும் பாரம்பரிய அறிவும் நவீன தொழில்நுட்ப அறிவும் சமமாக மதிக்கப்பட்டு பொருத்தப்பாடு உள்ள இடத்தில் இணைக்கப்படும். எல்லா மட்டங்களிலும் கற்றல் நிகழ்ந்துகொண்டே இருக்கும். இப்பயணத்தின்போது எமது கூட்டு முயற்சியின் பயனாக கையில் உள்ள நிலைமைக்கு உகந்த தீர்வுகள் பரீட்சிக்கப்படும்,பொருத்தமானவை பகிரங்கப்படுத்தப்படும். சிறு வகை மாற்றங்கள் பெருமட்ட நீர்ப்பாவனை விடயத் தீர்மானங்களாக சமூக மட்டத்தில் ஏற்றுக் கொள்ளப் படலாம். ஆய்வும் அதே ஆய்வின் வெளிப்பாடாக செயற்படுத்தலும் சமகாலத்தில் நிகழ்வதால் இவ்வணுகுமுறை Action Research அல்லது செயலாற்றல் ஆய்வு எனப்படுகிறது. உரியவர்கள் இம்முயற்சியில் பங்கேற்பதால் இது பங்கேற்பு செயலாய்வு (Participatory Action Research) ஆகிறது.



**கே: இச்செயற்றிட்டத்தினை வழிநடத்துவதில் எவ்வகையான சவால்களை எதிர்கொண்டீர்கள்? அவற்றை எவ்வாறு வென்றீர்கள்?**

**ப:** இதுபோன்ற ஆய்வுகளை முன்னெடுத்த கள அனுபவங்கள் பலவற்றை நான் கொண்டிருந்தபோதும், இவ்வாய்வுத் திட்டத்தின் பரிமாணங்கள் அவற்றை விட அகன்றவையாகவும் பெருமளவு பங்கேற்பாளர்களை அணி திரட்டும் பொறுப்பை உள்ளடக்கியவையாகவும் இருந்தன என்பதுதான் உண்மை. எனவே தான் 2020 ஆம் ஆண்டு வேலைகள் தொடங்கி இரு வாரங்கள் நிறைவாக முன்னரே வந்து சேர்ந்த கோவிட் பெருந்தொற்றையே நான் கண்ட முதலாவது மிகப்பெரும் சவாலாகக் கருதுகிறேன்.

ஓரிரு மாத தாமதத்துடன் இயங்கத்தொடங்கிய ஆய்வினை நல்லூர், கோப்பாய் , அக்கராயன் எனும் மூன்று பிரதேசங்களில் 2020 இற்குள் இவ்வகை action research ஆய்வுக்குரிய முறையியலைத் (methodology), தன் நெறியிலிருந்து வழுவாத வகையில் கொண்டியக்கியமை பெருஞ்சவாலாகவிருந்தது. எட்டு வெவ்வேறு அறிவுத்துறைசார் பன்னிரெண்டு பல்கலைக்கழக ஆய்வாளர்களையும், புதிதாக இணைக்கப்பட்ட உதவி ஆய்வாளர்கள் நால்வரையும் உள்ளடக்கிய அணி முன்னின்று களத்தில் மேற்கொண்ட, பதினைந்து , நான்கு மணி நேர சமூக மட்டச் செயலமர்வுகளும், அவற்றில் நானும் தவறாமல் தொலைவிலிருந்து Zoom ஊடாக நிகழ்நிலையில் இணைந்ததெல்லாம் புதுமையும் பரீட்சார்த்தங்களும் மிக்க அனுபவங்களாகத்தான் இருந்தன.

இத்தனை சோதனைகளின் மத்தியிலும் மூன்றாண்டு கால ஆய்வுக்கென பட்டியலிட்ட அடைவுகளையும் ஆய்வு வெளியீடுகளையும் உருவாக்கியது பலரிடமும் மெச்சுதலைப் பெற்றுத்தந்தது. இவ்வாறு பல் பரிமாணங்களுடைய சவால்களின் மத்தியில் இணைக்கப்பட்ட பங்காளர்தான் அடுத்த இரண்டாண்டுகளுக்கும் மேலாக வட மாகாணத்தின் நீர்வள உரையாடல் வட்டமாகத் திரட்சி பெற்று இயங்குகின்றனர் என்பது இன்றைய பெறுபேறாகும். வடக்கின் இளம் நீர் வாண்மையாளர் வட்டம் அரைத் தசாப்தத்துக்கும் அதிகமான காலம் கடந்துசெல்வது மற்றுமோர் பெறுபேறாகும். இவ்வாய்வுத்திட்டம் அடைந்த பெறுபேறுகள் பற்றி நீங்கள் அடுத்த மாத துளி இதழிலே அறியலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## உலக நீர் தினம் நேற்று!

பனிப்பாறைகளின் தொழிற்பாடுகள் பற்றியும் அவை உருகிச்செல்லுதல் ஆர்முடுக்கப்படுவதால் ஏற்படும் விளைவுகள் பற்றியும் உலகளாவிய ரீதியிலே விழிப்புணர்வை ஏற்படுத்துவதே உலக நீர் தினத்தை இவ்வாண்டு நாம் கொண்டாடுவதன் பிரதான நோக்கமாகும் . அதனை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது.

# உருகும் பனிப்பாறைகள்; தத்தளிக்கும் எதிர்காலம்!

**வஸ்பார்** (WASPAR) **செயற்றிட்டம்,**
மருத்துவபீடம், யாழ். பல்கலைக்கழகம்.
water@univ.jfn.ac.lk

இங்கிருந்து பல்லாயிரம் மைல்கள் தொலைவிலே, வட இந்தியாவின் இமாலய மலைத்தொடரின் உச்சியிலே இராட்சதப் பனிப்பாறைகள் காணப்படுகின்றன. அவை பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் வயதை உடையன. அவை காலங்காலமாக மிகவும் அத்தியாவசியமான தொழிலொன்றைச் செய்துவருகின்றன. வற்றாத ஜீவ நதிகளூடாக பலமில்லியன் மக்களுக்கு அத்தியாவசியமான தூய நீரை வழங்குவதே அத்தொழிலாகும். அம் மக்களின் வாழ்வாதாரத்துக்கு இந்த ஜீவநதிகள் அத்தியாவசியமாய் அமைந்தன.

காலம்செல்லச் செல்ல, சனத்தொகை பெருகியது. தேவைகள் அதிகரித்தன. அபிவிருத்தியை நாடி அனைவரும் நகரத்தொடங்கினர். காபன் உமிழ்வும் மெல்ல மெல்லக் கூடியது. பூகோளம் வெப்பமயமாகியது. மிகுதி நல்ல செய்தியாய் இருக்கவில்லை

தாமுண்டு தம் வேலையுண்டு அளவாய் உருகுவதும் உறைவதுமாய் தம் பணியைச் செய்துவந்த பனிப்பாறைகள் மிகையாக உருகத் தொடங்கின.தம் நிலையை எண்ணிக் கண்ணீர்மல்கிக் கதறின. நாங்கள் எல்லோரும் அறிந்த, பங்காளர்களாகவிருக்கின்ற பூகோளவெப்பமயமாதலின் பெரு விளைவே காலநிலை மாற்றம் என்போம்.

எங்கள் அன்றாடத்தேவைகளைப் பூர்த்திசெய்யும் விறகு அல்லது எரிபொருள் அடுப்புகளாகட்டும், நாம் பயன்படுத்தும் சுவட்டு எரிபொருள் வாகனங்களாகட்டும், எமக்குத் தேவையான பொருள்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளாகட்டும் இவையெல்லாம் குறைதகனம் காரணமாக உமிழும் கண்ணுக்குத் தெரிந்த, தெரியாத கரும் புகையிலே காணப்படும் காபன் துகள்கள், காற்றின் ஓட்டத்துடன் காவப்பட்டு மலையின் உச்சிகளிலே காணப்படும் இப்பனிப்பாறைகள் மீது படிந்துவிடுகின்றன.

வெண்பனி, சூரியக் கதிரைதெறிப்படையச் செய்யும் . ஆனால் அதன் மீது நுண்ணிய கருங்காபன் துகள்கள் படியும்போது அதன் சூரியக்கதிரைத் தெறிப்படையச் செய்யும் ஆற்றல் குறைவடையும். இக்காபன் துகள்கள் சூரியனின் வெப்பக் கதிர்ப்பை உறிஞ்சி பனிப்பாறைகளின் சக்திச் சம நிலையைக் குழப்ப ஆரம்பிக்கும். வளிமண்டலத்திலே காணப்படும் இந்த நுண்ணிய காபன் துகள்களால் வளியின் வெப்பநிலையும் அதிகரிக்கத் தலைப்படும். இவ்வாறும் அதிகரிக்கும் வெப்பமும் வெப்பநிலையும் பனிப்பாறைகளை மிகையாக உருகச்செய்யும். சிறிய பனிக்கட்டியைக் கையிலெடுத்து, உச்சி வெயிலில் பிடித்துப் பாருங்கள். அது சில நொடிகளிலேயே எவ்வளவு வேகமாக உருகிக் காணாமல் போய்விடுகிறது? இந்தப் பனிப்பாறைகளும் அப்படித்தான். எங்கோ பல்லாயிரம் மைல்களுக்கப்பால் மலையுச்சியிலிருக்கும் பனிப்பாறைகள் உருகுவதற்கும் தென்னாசியாவின் கீழ் மூலையிலே அமைத்திருக்கும் இலங்கைச்சிறுதீவுக்கும் என்ன சம்பந்தம் என்று யோசிக்கிறீர்களா? சம்பந்தமில்லாமலில்லை. இந்தப் பனிப்பாறைகள் அபரிமிதமாக உருகுவதால் என்னென்ன விளைவுகள் ஏற்படலாம் என சிந்தித்திருப்பீர்களா?

அவை உருவாக்கும் ஜீவ நதிகளின் நீர் வரத்துக் குறையத்தொடங்கும். இதனால் அந் நதிகளைக் குடிநீருக்காகவும், தம் வாழ்வாதாரத்துக்காகவும் நம்பியிருக்கும் சமூகங்களின் வாழ்வாதாரநிலை சீர்குலையும். உருகும் பனிப்பாறைகள் அவை சார்ந்த பிராந்தியத்தின் வானிலையில் பெருஞ் செல்வாக்குச் செலுத்தும். உருகும் பனிப்பாறைகளால் வெள்ளம் மட்டுமன்றி வரட்சி, நிலச்சரிவு போன்றனவும் கூட ஏற்படலாம் . இவை உயிர்களுக்கு மட்டுமன்றி உட்கட்டமைப்பு வசதிகளுக்கும் சேதத்தை ஏற்படுத்தும். இப்பனிப்பாறைகள் உருகுவதால் சூழல் தொகுதிகள் நிலை குலையும். நீரின் வெப்ப நிலை மாற்றமடையும்; நீரின் போக்கினால் நீர் சார் வாழிடங்கள் அச்சுறுத்தலுக்கு ஆளாகும். பனிப்பாறைகள் அபரிமிதமாக உருகுதல் வானிலைப் பாங்குகளில் மட்டுமன்றி கடல் மட்டம் உயர்வடைவதிலும் பெரும் தாக்கத்தை செலுத்துகின்றன. இந்நிலையில் இலங்கை போன்ற சிறிய தீவுகளின் பாதிக்கப்படும் தன்மை வெகுவாக அதிகரிக்கின்றது.

இலங்கையில் நாம் எதிர்கொள்ளும் பாரிய விளைவு, மழை நாள்களின் எண்ணிக்கை காலத்துடன் குறைவடைந்து செல்லுதலாகும். அதாவது வருடாந்தம் இலங்கைக்குக் கிடைக்கும் மழைவீழ்ச்சியின் அளவில் குறிப்பிடத்தகு மாற்றம் நிகழாத போதும் கிடைக்கும் மழை வீழ்ச்சியின் செறிவு அதிகரிப்பானது மழை நாள்களின் எண்ணிக்கையைக் குறைத்து வரண்ட நாள்களின் எண்ணிக்கை அதிகரித்து விடும் .

மழை நாட்கள் எம் தேசத்தை வெள்ளக்காடாக்கி விடும். இந்த நிகழ்வுகளை நாம் வருடாந்தம் எதிர்கொள்கிறோம். இவற்றால் உயிர்களுக்கும் சொத்துகளுக்கும் நாட்டின் பொருளாதாரத்துக்கும் ஏற்படும் இழப்புகள் அளப்பரியன.

இவ்வாறு நாம் எதிர்கொள்ளும் வானிலை மாற்றங்கள் எங்கோ தொலைவிலிருக்கும் பனிப்பாறைகள் உருகுவதாலும்கூட ஏற்படலாம் என்பதை நாம் ஏற்றுக்கொள்ளத்தான்வேண்டும்.
பனிப்பாறைகளைச் சார்ந்து காணப்படும் பிராந்தி யங்களிலே உருவாகியிருக்கும் அவசர நிலையை உணர்ந்த ஐக்கிய நாடுகள் சபை, 2025 ஆம் ஆண்டை பனிப்பாறைகளைப் பேணுவதற்கான சர்வதேச ஆண்டாகப்பிரகடனப்படுத்தியிருக்கிறது. அதனோடிணைந்ததாக, தூயநீரின் இருப்புக்கு மட்டுமன்றி இப்பூவுலகின் நிலைப்புக்கும் காரணமாவிருக்கும் பனிப்பாறைகளைப் பேணுவதன் முக்கியத்துவத் தையே இவ்வருடத்திற்கான உலக நீர் தினமும் உணர்த்தி நிற்கிறது.

இன்றைய தினத்திலே ஒவ்வொரு துளி நீரையும் மதிக்கவும் பாதுகாக்கவும் உறுதிபூணுவோம். அத்துடன் நாம் அறிந்தே நடைபெறும் காபன் உமிழ்வை ஏற்படுத்தும் செயற்பாடுகளைக் குறைக்க முயல்வோம். கரும்புகையைக் கக்காத வண்ணம் வாகனங்களைப் பராமரிப்போம். எங்கள் சுக வாழ்வு மட்டுமன்றி இப்பூவுலகின் நல்வாழ்வும் எங்கள் கைகளிலேயே தங்கியிருப்பதை உணர்ந்து செயற்படுவோம். வாருங்கள் கரங்கோர்ப்போம்!

---

**69%** பூமியில் சிறைப்படுத்தப்பட நன்னீர்
பெரும்பான்மையான பனிப்பாறைகள் **அந்தாட்டிக்கா** மற்றும் **கிறீன்லாந்தில்.**

**2000 – 2019 இற்குள் மட்டும் 267 பில்லியன் மெற்றிக் தொன் பனிப்பாறைகளை இழந்துவிட்டோம்!**

உலகின் மிகப்பெரிய பனிப் பாறையான கும்பு பனிப்பாறை **எவரெஸ்ட் மலைச் சிகரத்தில்** கடல் மட்டத்திலிருந்து 4,900-7000 மீ உயரத்தில் காணப்படுகிறது. -ICMOD

பூவுலகின் **மூன்றாவது முனையாக** அறியப்படும் **இமாலய பனிப் பாறைகளால் ஊட்டம் பெறும் ஜீவ நதிகளை நம்பி 1.3 பில்லியன் மக்கள்** வாழ்கின்றனர்! — உலக வங்கி

**உருகும் பனிப்பாறைகள்**
**2006–2018** வரை நிகழ்ந்த கடல் மட்ட உயர்வின் **21%** க்கு **உருகும் பனிப்பாறைகளே** காரணம்! - IPCC

**அதிகரிக்கும் வெப்பநிலை காரணமாக இமாலய மலைத்தொடரில் அதிக மழை வீழ்ச்சியும் குறைந்த பனிப்பொழிவும் ஏற்படும். இதனால் பனிப்பாறைகள் மீளுருவாதல் குறைவடையும்** - நாசா

பல்லாண்டுகளுக்கு முற்பட்ட வளிமண்டல நிலைமைகளை ஆராய பனிப்பாறைகளின் அடியில் சிறைப்படுத்தப்பட்டிருக்கும் வளிக்குமிழிகளை பிரித்தெடுத்து விஞ்ஞானிகள் ஆய்வு செய்கின்றனர். பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் காணப்பட்ட காபனீரொட்சைட்டின் விகிதம் கூட இவ்வாய்வுகளில் கணிக்கப்படுகிறது. — நாசா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சங்கப் பெண்பாற் கவிஞர்களின் பார்வையில்

# தமிழர் பண்பாடும் வாழ்வியலும்

## – ஓர் நோக்கு

பேராசிரியர் சிவேசன் சிவானந்தமூர்த்தி
சந்தைப்படுத்தல் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



08

பிரிவுத்துயரினையும் காமத்தின் விளைவால் ஏற்படுகின்ற தவிப்பையும் பல பெண்பாற் புலவர்களின் பாடல்கள் விளக்குகின்றன. பெரும்பாலான பாடல்வரிகளின் யதார்த்தமானது கேள்விக்குரியதாகவுள்ளதுடன் நாடகத்தன்மை வாய்ந்ததாகவுமுள்ளது. ஆனாலும் உடலியல் தேவை அவசியமானது என்பதனை உணர்வுபூர்வமாக அறிந்துகொள்ளக்கூடியதாகவுள்ளது. சங்க இலக்கியங்களில் கணவனைப் பறிகொடுத்த அல்லது இழந்த பெண்களின் ஆதங்கத்தினை, துன்பத்தினை பூதபாண்டியன் தேவியர், மாரிப்பித்தியார், தாயங்கன்னியார் போன்ற பெண்பாற் புலவர் உட்பட பல புலவர்கள் கவியாகப் படைத்துள்ளனர். கணவனை இழந்தவளை "கைப்பெண்", "கைம்பை" என்ற சொற்களினால் அழைத்தனர். குடும்பம் என்ற நிறுவனத்தில் கணவன் மற்றும் மனைவி என்கின்ற பாத்திரங்கள் முதன்மைவாய்ந்தவை. தலைவனை இழந்த குடும்பத்தில் சமூக, பொருளாதார நிலைபேண்தன்மை சிதைவது மட்டுமன்றி, தலைவியின் இருப்பினையும் சிதைப்பதாகவேயுள்ளது. பூதபாண்டியன் தேவியாரினால் எழுதப்பட்ட 246ஆவது புறநானூற்றுப் பாடலில் கணவனை இழந்த மனைவி ஏன் உடன்கட்டை ஏறவேண்டும் என எண்ணுகிறாள் என்பதற்குப் பல காரணங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. சங்ககாலத்துச் சமூகத்தில் கணவனை இழந்த பெண்ணுக்குப் பழைய சாதம், (நீர்ச்சோறு) எள்துவையல், புளிசேர்த்த வேளைக்கீரை போன்றன உண்பதற்கும் அவர்கள் படுத்து உறங்குவதற்கு கற்படுக்கையும் வழங்கப்படும். இவ்வாறன வாழ்வியல் நடைமுறையினை கைம்மை நோன்புற்றல் என்பர். கைம்மைகளுக்கு வழங்கப்படும் கொடுமையான வாழ்வியல் தண்டனைகளினை எண்ணிப் பயந்தும் அவர்கள் தமது கணவனின் ஈமத்தீயில் தம்மை மாய்த்துக்கொள்ள விரும்பினார்கள். அவர்கள் ஈமத்தீயில் தம்மை மாய்த்துக்கொள்ளும் அனுபவத்தை "இதழ் மலர்ந்த தாமரையின் தண்ணீர் பொய்கை நீர் போல் இன்பம் அளிக்கும் என்று" வர்ணித்துள்ளனர்.

சங்கப் புலவர்கள் கணவன் மறைவின்பின் கைம்மைகளாக வாழ்வதனைவிட மிக உயர்வானதும் உன்னதமானதும் ஈமத்தீயில் தம்மை மாய்த்தல் சிறந்தது என நம்பினர். சங்ககாலத்தில் கணவன் இறந்தவுடன் மனைவியும் தன் உயிரைப் போக்கிக்கொள்ளும், தலைக்கற்பு, இடைக்கற்பு போன்ற மரபுகள் இலக்கியங்களில் வலியுறுத்தப்படுகின்றன. கைம்மை நோன்பு குறித்துப் பல பாடல்களில் விளக்கப்பட்டிருக்கின்றது. மாநோக்கத்து நப்பசலையார் பாடிய பாடலில் பெண் ஒருத்தி விழுப்புண் பட்டு இருக்கும் தனது கணவன் இறந்தால் தான் "கழிகல மகளிர்" கைம்மை நோன்பு அனுஷ்டிக்க வேண்டிவரும் என எண்ணிக் கலக்கம் கொள்கின்ற நிலை வெளிப்படுத்தப்படுகின்றது. இப்பாடலில் மாநோக்கத்து நப்பசலையார் கைம்மை நோன்பு இருக்கும் கைம்மைகள் மொட்டையிட்டு, அல்லிச்சோறு உண்டு வாழவேண்டும் என்கின்றார். மேலும் இப்பாடலில் தலைவி விழுப்புண் அடைந்த தலைவனை இழந்துவிடுவேன் என்ற பதகளிப்பினையும், அவ்வாறு நடந்துவிடுமே என எண்ணி அருடம் கொள்கின்றாள். இவ்வாறு நடந்துவிடும் என்பதற்கு புண்கள் மீது வண்டுகள் மொய்க்கின்றதினையும், வீட்டில் ஏற்றிவைத்த விளக்கு அடிக்கடி அணைகின்றமையினையும் உறங்காத விழிகளுடன் கணவன் அருகிலிருந்து சேவகம் செய்த என்னுடைய கண்கள் உறக்கத்தை நாடுகின்றமையினையும் ஆந்தை அலறுகின்றமையினையும் செம்முது பெண்டின் சொற்கள் பதகமானதாக அமைந்ததினையும் காரணமாக முன்வைக்கின்றனர்.

தலைவன் மீளாத்துயில் கொள்ளப்போறான் என்று எண்ணிய பெண்ணின் ஏக்கம் மிகவும் யதார்த்தமாக 280 ஆவது புறநானூற்றுப்பாடலில் பதிவுசெய்யப்பட்டுள்ளது. தாயங்கண்ணியார் என்ற பெண்பாற்புலவர் கைம்மை நோன்பின் கொடுமையினை "மனையம் மனைவியம்" என்ற புறநானூற்றுப்பாடலில் பின்வருமாறு பதிவுசெய்துள்ளார். சங்ககாலத்தில் கணவனை இழந்த பெண்களுக்குத் தலைமயிர்கள் கொய்யப்பட்டன. அவர்கள் கைகளில் வளையல்கள் அணிவதற்கான வாய்ப்புகள் மறுக்கப்பட்டன. அவர்களுக்கு வழங்கப்படும் உணவிலும் வரையறைகள் இருந்தன. அதாவது அல்லி இலையில் அளவுசாதம் வழங்கப்பட்டது. இவ்வாறு பல்வேறு துன்பங்களினை கைம்மைகள் அனுபவித்ததை தாயங்கண்ணியார் என்ற பெண்பாற் புலவர் குறிப்பிடுகின்றார். இவ்வாறு அளவுச் சாப்பாட்டினை உட்கொள்ளுவதால் பால்வேண்டி அழும் பாலகனுக்குப் பால் வழங்கமுடியாத தாயின் பரிதாபமான நிலமையும் இங்கு சுட்டிக்காட்டப்படுகின்றது.

இவ்வாறு கைம்மைகளின் அவலமான வாழ்வியலை சங்கப்பாடல்கள் எமக்குக் காட்சிப்படுத்துகின்றன. அதே வேளை மனைவியினை இழந்த கணவனின் வலிகள் ஆழமானவை. கணவனை இழந்த பெண்குறித்த சமூகப்பார்வையும், மனைவியினை இழந்த ஆண்குறித்த சமூகத்தின் பார்வையும் வேறுபட்டவையாக இருந்தன. ஆனால் தனிமனித இழப்பின் வலியானது மிக ஆழமாக சங்கப்பாடல்களில் சித்தரிக்கப்பட்டுள்ளது.

சேரமான் கோட்டம் பலத்துத்துஞ்சிய மாக்கோதை என்ற பெண்பாற் கவிஞர் மனைவியினை இழந்த கணவரின் புலம்பலினைக் குறிப்பிடுகையில் கள்ளிச்செடிகள் வளர்ந்துள்ள துயிலும் இல்லத்தில் (சுடுகாட்டில்) விறகுகளினால் அடுக்கப்பட்ட படுக்கையில் என் அன்புக்குரியவளுக்கு தீ மூட்டப்பட்டுள்ளது. நான் தனியே என்னவளை ஈமத்தீயில் விடமாட்டேன். நானும் அவளுடன் கூடவே ஈமத்தீயில் கலக்கப்போகிறேன் என துணைவியை இழந்த ஆடவன் படும் வேதனையை 245ஆவது புறநானூற்றுப் பாடல் குறிப்பிடு கின்றது. குடும்பத்தில் ஏற்படுகின்ற இழப்புகள் குடும்பத்தின் இயல்புநிலைகளினைப் பாதிப்பவையாகவே சங்ககாலம் முதல் சமகாலம் வரை காணப்படுகின்றன.

(தொடரும்)

# ஊர்ப்புதினம்

பாகம் 3

இராகவன்

உதயண்ணை எனக்கு மோட்டார் சைக்கிள் ஓடுறதைப் பற்றிச் சொன்ன விளக்கம் ஒரு கணிதச்சூத்திரம் மாதிரியிருந்திச்சுது. அப்ப நெல்லியடி சயன்ஸ் சென்ரரில 'ஓ.எல்லுக்கு' இராமர் எண்டொராள் மற்ஸ் படிப்பிச்சவர். அவரின்ர முழுப்பெயர் இராமகிருஷ்ணன். அவர் வடமராட்சிக் கல்வி வலயத்தின்ர கணித மூலவள நிலையத்துக்கும் பொறுப்பாயிருந்தவர். மற்ஸ் படிப்பிக்கிறதில வலுவிண்ணன். மற்றாக்கள் மண்டையைப் போட்டு உடைக்கிற கணக்குகளையெல்லாம் வலுசிம்பிளா விளங்கப்படுத்திப்போட்டு "அங்க ஒரு மயிருமில்லை அவ்வளவுதான்" எண்டு சொல்லி ரஜினி ஸ்ரையில்ல முன்னுக்கு விழுகிற மயிரைக் கையால பின்னுக்குத் தள்ளிவிடுவார். உதயண்ணை எனக்குத் தந்த விளக்கம் அப்பிடித்தானிருந்தது.

அண்டைக்கு நான் வெளியில எடுத்த மோட்டார் சைக்கிள் இண்டுவரைக்கும் 'ஸ்மூத்தா' ஓடுது. நான் மோட்டார் சைக்கிள் ஓடுறது எனக்கு இப்பவும் நம்பேலாமல்தானிருக்கு. எல்லாப் புகழும் உதயண்ணை ஒருவருக்கே! நான் மற்றாக்கள் மாதிரியில்ல. கொஞ்சம் ஸ்லோவாத்தான் ஓடுவன். எல்லாரும் என்னை முப்பதில ஓடுறதெண்டு சொல்லுவினம். நானப்ப மருதங்கேணி டீ.எஸ் ஒப்பிஸில வேலை செய்யேக்குள்ள ஒருநாள் திட்டமிடல் கிளையில வேலை செய்யிற ஒரு பொடியன் வந்து என்னட்ட, "அண்ணை உங்கட அம்பன் சமுர்த்தி வங்கிக்கு ஒரு செக் இருக்கு குடுத்துவிடேலுமோ? " எனக்கேட்டான். "அதுக்கென்ன தாங்கோ! குடுத்துவிடுறன்" எண்டு நான் சொன்னன். அப்ப என்னோட எங்கட ஒப்பிஸ் 'ரீ.ஓ' (ரெக்னிக்கல் ஒப்பிஸர்) ஞானி கதைச்சுக்கொண்டு நிண்டவர்.

21


ஆள் வலுமுசுப்பாத்திக்காரன். ஞானேந்திரன் எண்டதுதான் அவரின்ர முழுப்பெயர். அவரின்ர தகப்பன் இரவீந்திரன் எண்டு நான் பருத்தித்துறை டீ.எஸ் ஒப்பிஸில வேலை செய்யேக்குள்ளை புலோலி கிழக்கு ஜீ.எஸ் ஆக இருந்தவர். சரி இப்ப கதைக்குவருவம். அப்பதான் என்னோட கதைச்சுக்கொண்டிருந்த ஞானி என்னைச் செக் கொண்டுபோகச் சொல்லிக்கேட்ட பொடியனைப் பாத்து, "உது அவசரமாக் குடுக்கவேண்டிய செக்கோ?" எண்டு கேட்டார். அதுக்கவன்,"ஓம்! ஏன் கேக்கிறியள்?" எண்டு திரும்பிக்கேட்டான். அதுக்கு ஞானி என்னைக்காட்டி, "இவரிட்ட அவசரமான செக் எண்டால் குடுக்காதேங்கோ! இப்ப நேரம் பன்ரெண்டு மணி. இவர் இப்ப வெளிக்கிட்டாலும் அம்பன் சமுர்த்தி வங்கிக்குப் போய்ச்சேரப் பொழுதுபட்டுப்போம். ஆனால் செக்கை ஒழுங்காக் கொண்டுபோய்ச் சேர்த்திடுவார். அதில ஒரு பிரச்சினையும் இல்லை"எண்டார்.

இதைப்போலதான் இப்பவும் மருதங்கேணி டீ.எஸ் ஒப்பிஸில ஏ.டி.பி. யாக இருக்கிற ரேவதியம்மா பிக்கப்பில ஒருநாள் பீல்ட் விசிற்றுக்குப் போய்க்கொண்டிருந்தா. அப்ப சிவனேயெண்டு என்ர பாட்டில மோட்டார் சைக்கிளில போய்க்கொண்டிருந்த என்னைப் பிக்கப்பைச் ஸ்லோவாக்கி, "இதைவிடச் ஸ்லோவா ஓடமாட்டியளா?" எண்டு கலாய்ச்சுப்போட்டுப் போனதையும் இந்த இடத்தில சொல்லவேண்டியிருக்கு. யாரென்ன கலாய்ச்சாலும் மோட்டார் சைக்கிளே ஓடுவன் எண்டு கனவிலயும் நினைச்சிருக்காதவன் ஸ்லோவா எண்டாலும் ஓடுறது ஒரு பெரும் சாதனை தானே?

ம்..... சரி இப்ப விசயத்துக்கு வருவம். நான் தைப்பூசத்திலண்டு உதயண்ணையின்ர மாமியாரின்ர அந்தியேட்டிக்குப் போனதைப் பற்றி சொன்னான் எல்லோ? அங்கை ஊர்ப்புதினத்தின்ர தீவிர வாசகர் ஒருத்தரை எதிர்பாராதவிதமாச் சந்திச்சன். அவரைப் பற்றி டீற்ரெயிலா அடுத்த கிழமை சொல்லுறன்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அப்பாவி மக்களுக்கு..!

அரசாங்கம் ஆரம்பத்திலையே வட மாகாணசபை ஒரு வெள்ளையானை எண்டு சொல்லிப்போட்டுது. புத்தியுள்ளவையள் எண்டால் அதுக்குள்ளாலை அவை என்னத்தைச் சொல்லவருகினம், சொல்ல விரும்புகினம் எண்டதை வடிவா விளங்கிக்கொள்ளுவினம். ஒரு ஹொட்டலுக்குப் போனால் பதின்மூண்டாம் இலக்க அறையிலை வெள்ளைக்காரன் தங்கமாட்டானாம். அப்பிடி அவைக்கு பதின்மூண்டிலை ஒரு பயம். அதுமாதிரி எங்கடை சகோதரங்களுக்கும் பதின்மூண்டு எண்டு சொன்னால் பயமாம். அதோடை அருவருப்புமாம். இருந்தும் அதை வெளிக்காட்டமாட்டினம்.

அந்தப் பதின்மூண்டை அகற்றவேணும். ஆனால் ஒரு கல்லிலை இரண்டு மாங்காயளை விழுத்திறதுதான் அவையின்ரை நோக்கம் எண்டது கனபேருக்குத் தெரியாது. எங்கடை ஆக்கள் ஆற்றையேன் கதையளைக் கேட்டுக் குழம்பிச் சனத்தையும் குழப்பிற ஞானசூனியங்கள், எனக்கெண்டால் ஒண்டும் விளங்கேல்லை. உண்மையைத் தெரிஞ்சும் தெரியாதமாதிரித்தான் எங்கடை ஆக்கள் நாடகம் ஆடுறாங்களோ தெரியேல்லை?




என்னைப் பொறுத்தவரை அரசாங்கத்தில இருக்கிறவையும் முன்னாள் போராளியள்தான். ஆனால் சிங்கள முன்னாள் போராளியள் இருந்தும் எங்கடை ஆக்களைப் போலை நடைமுறைப்பயிற்சி இல்லாதவை. இப்பதானே முதல் தடவை ஆட்சிக்கு வந்திருக்கினம். இதுவரை எதிர்க்கட்சிக் கதிரையளிலை இருந்து இது சரி, அது பிழை, இதைக் குடுங்கோ, அதைக் குடுக்காதையுங்கோ எண்டு மட்டும் சொல்லிக்கொண்டிருந்தவை. அதிர்ஷ்டம் வேலை செய்ததால எலக்சனில மூண்டில் இரண்டு பெரும்பான்மை எடுத்துப்போட்டினம். அதாலைதான் காலை முன்னுக்கு வெக்கிறதும் பிறகு பின்னாலை எடுக்கிறதுமா இருக்கினம். இலங்கையைக் கூட்டித் துடைக்கிறம். சாணகம் கரைச்சுத் தெளிச்சுச் சுத்தமாக்கிறம், ஊழலை ஒழிச்சுக்கட்டிறம் எண்டு சொல்லுகினமே தவிர உருப்படியா ஏதும் செய்தமாதிரித் தெரி யேலை. ஊழல், மோசடி செய்த ஆக்களையும் 'இந்தா பிடி'எண்டு பிடிக்கிறதும் பிறகு பிணை எண்ட பேரிலை விடுறதுமா உவையும் நாடகமாடிக்கொண்டு இருக்கினம்.

**எங்களுக்குள்ளை அரசியல்வாதியள் எண்ட பேரிலையும் பொதுநலவாதியள் எண்ட பேரிலையும் கொஞ்சப்பேர் இருக்கினம். அவை சுரணை இல்லாதவை. மசுக்குட்டி பட்டாலும் தட்டிப்போட்டுப் போற கேசுகள். அவை இப்ப வட மாணாசபை எலக்சனுக்கு தலைமை வேட்பாளரைத் தேடித்திரியினமாம். அந்தளவுக்கு நல்ல ஆக்களுக்கு இஞ்ச தட்டுப்பாடு.**

என்னத்தைச் சொன்னாலும் எங்கடை பெடியள், சின்னன் எண்டாலும் ஒரு நாட்டைக் கட்டிஎழுப்பி ஆட்சிசெய்து தங்கடை கெட்டித்தனத்தை உலகத்துக்கு எடுத்துக்காட்டினவை. அவையிட்டை எல்லாம் இருந்தது. ஏன் பிளேனைக்கூட ஏத்தி இறக்கினவையெல்லோ? கடைசியிலை கூட்டணி சேர்ந்து குழிபறிக்காட்டி இன்னும் உலகத்தையே கெடிகலக்கிக்கொண்டுதானிருப்பினம். அவை இல்லாததாலைதான் இப்ப இஞ்ச இப்பிடிச் சீரழிவுகள்.

சும்மா இருந்த சங்கை ஊதிக்கெடுத்தானாம் ஆண்டி எண்டமாதிரி, போன வட மாகாண எலக்சனிலை ஒராளைக் கொண்டு வந்து நிப்பாட்டிட்டினம். நித்தியானந்தா சொன்ன மாதிரி அவரும் கொழும்பிலை குட்போயா இருந்தவர். ஆனால் அவருக்கு அரசியல் எண்டால் என்ன எண்டு ஒரு சவமும் தெரியாது. அவர் சிவனே எண்டு சொல்லிக் கொண்டு கம்பராமாயணத்தைக் கக்கத்துக்கை வைச்சுக்கொண்டு திரிஞ்சவர். அவரைக் கொண்டு வந்தவை என்ன நினைச்சினம் எண்டால் அவரும் தாங்கள் சொல்லுறபடி ஆடுவார் எண்டு. ஆனால் அவையளின்ரை ஆருடம் பிழைச்சுப்போச்சுது .அவர் கொஞ்சநாளிலை இவைய தன்ர தாளத்துக்கு ஆடவைக்க வெளிக்கிட்டுட்டார். கடைசியா கட்சி தொடங்கி, எம்.பி.யாகினதுதான் மிச்சம். அவரால சனத்துக்கு ஒரு லாபமும் இல்லை. பார்வைக்கிறதுக்கு ஒரு பொம்பிளைக்கு சிபாரிசுக் கடிதம் குடுத்தது மட்டும்தான் அவர் செய்த சாதனை.

நல்லாப் படிச்சவையளை நம்பப்பிடாதெண்டதை அவர் உறுதிப்படுத்திட்டார்.

எங்களுக்குள்ளை அரசியல்வாதியள் எண்ட பேரிலையும் பொதுநலவாதியள் எண்ட பேரிலையும் கொஞ்சப்பேர் இருக்கினம். அவை சுரணை இல்லாதவை. மசுக்குட்டி பட்டாலும் தட்டிப்போட்டுப் போற கேசுகள். அவை இப்ப வட மாகாணசபை எலக்சனுக்கு தலைமை வேட்பாளரைத் தேடித்திரியினமாம். அந்தளவுக்கு நல்ல ஆக்களுக்கு இஞ்ச தட்டுப்பாடு. உதைச் சொல்லவே எனக்கு நாக்கூசுது. உலகமே 'இப்பிடிப்பட்ட ஒரு தலைவன் எங்களுக்கு கிடைக்கமாட்டாரோ' எண்டு ஏங்கின ஒரு தலைவர் இருந்த இடத்தில, இப்ப ஒரு உள்ளூராட்சி வேட்பாளருக்குக் கூட நல்ல ஆக்கள் இல்லாமல் அலையிறம் எண்டால், எவ்வளவு கேவலமாப் போட்டம் எண்டொருக்கா யோசிச்சுப் பாருங்கோ.

இப்படிக்கு
எப்பவும் யோசிக்கும்,
[illegible]

# கதாநாயகர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களால் தமது கட்சிகளையும் கட்டியெழுப்பமுடியவில்லை மக்களையும் கட்டியெழுப்ப முடியவில்லை. தங்களைக் கதாநாயகர்களாக அல்லது தியாகிகளாகக் கட்டமைப்பதற்காக தமது அரசியல் எதிரிகளை வில்லன்களாகச் சித்திரிக்கும் ஓர் அரசியல் பாரம்பரியமானது முடிவில் தமிழ்த் தேசிய அரசியல்வாதிகளில் அநேகம் பேரை சொந்தமக்களே நம்பமுடியாத வில்லன்களாக பார்க்கும் ஒரு பரிதாபதாபகரமான இடத்தில் வந்து நிற்கின்றதா?

உள்ளதில் பெரிய கட்சியாகிய தமிழரசுக் கட்சி தலைமைப் போட்டிக்குள் சிக்கி ஏறக்குறைய தூர்ந்துபோய்விட்டது. அந்தக் கெட்ட முன்னுதாரணமானது தமிழரசியலின் குறிகாட்டியும்கூட. சுமந்திரன், சிறீதரன், சாணக்கியன் போன்றவர்கள் தங்களுக்கென்று டிஜிட்டல் ப்ரோமோஷன் அணிகளை வைத்திருக்கிறார்கள். அவை அவர்களை கதாநாயகர்களாகக் கட்டமைக்கின்றன. ஆனால் கட்சியை நீதிமன்றத்திற்கு வெளியே கொண்டுவரமுடியாத தலைவர்களை தமிழ் மக்கள் கதாநாயகர்களாகக் கருதமாட்டார்கள். சில சமயம் வில்லன்களாகத்தான் பார்ப்பார்கள்.

விக்னேஸ்வரன் அரசியலுக்கு வந்த புதிதில் ஜனவசியம் மிக்க ஒரு தலைவராகத் தோன்றினார். தமிழ் மக்கள் பேரவையின் எழுச்சியோடு அவருக்கு இருந்த ஜனக் கவர்ச்சி மேலும் அதிகரித்தது. ஆனால் அவரே அதனைப் போட்டு உடைத்தார். இப்பொழுது அவருடைய ஜனவசிய முகம் பரிதாபகரமான விதத்தில் சுக்குநூறாகிவிட்டது. இது விக்னேஸ்வரனுக்கு மட்டுமல்ல கடந்த 15 ஆண்டுகளில் மேலெழுந்த பெரும்பாலான எல்லா தமிழ் அரசியற்கட்சித் தலைவர்களுக்கும் பொருந்தும். தமிழ்த் தேசிய அரசியலில் மேல் எழுகின்ற எந்த ஒரு தலைவராமும் தன் ஜனவசியத்தை ஏன் தொடர்ந்து தக்கவைக்க முடியவில்லை?

ஏனென்றால் யாருமே தாங்கள் முன்வைத்த இலட்சியத்தை நோக்கி தமது கட்சியையும் கட்டியெழுப்ப முடியவில்லை; தமிழ் மக்களையும் கட்டியெழுப்ப முடியவில்லை. தன் பலம் எதுவென்று தெரியாமல், தானே தன்னில் நம்பிக்கை இழந்து, ஒருவர் மற்றவரை நம்பாத, ஒருவர் மற்றவரை சந்தேகிக்கின்ற, ஒருவர் மற்றவரை வெறுக்கின்ற ஒரு சமூகமானது தன்னை ஒரு தேசம் என்று அழைக்கமுடியாது. தமிழ்த் தேசியக் கட்சிகள் தமிழ் மக்களையும் ஒரு தேசமாகக் கட்டியெழுப்பத் தவறுகின்றன. தங்களையும் கட்சிகளாகக் கட்டியெழுப்பத் தவறுகின்றன. தமிழ் மக்களுக்கு ஆறுதலாகவும் நம்பிக்கைஒளியாகவும் முன்னுதாரணமாகவும் நிற்கக்கூடிய தலைவர்கள் எத்தனை பேர் உண்டு? அல்லது அப்படிப்பட்ட தலைவர்கள் மேலெழுமுடியாத ஓர் அரசியல் சூழல் தமிழ் மக்கள் மத்தியில் நிலவுகின்றதா? அதற்குக் கட்சிகள் பொறுப்பில்லையா?

இந்த சமூகப் பொருளாதார அரசியல் மற்றும் உளவியல் சூழல் தொடருமாக இருந்தால் அநுரவை நோக்கி ஆர்வத்தோடு பார்க்கின்ற; அவரை கதாநாயகராகக் கொண்டாடுகின்ற இளையவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும். அது இனி வரக்கூடிய தேர்தல்களிலும் பிரதிபலிப்புகளை ஏற்படுத்தும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

○ மானிப்பாய் சுதன்

# நிறைநாழி

நேற்றைய தினத்தில் இருந்து மகளின் நச்சரிப்புத் தாங்கமுடியாமல் இருந்தது. அவளது ஆசிரியரின் மகளின் பூப்புனித நீராட்டு விழாவுக்குச் செல்லவேண்டும். எனக்கோ அங்கு அறிமுகமானவர் இல்லை. மகளோ தன்னுடன் வரவேண்டும் என அடம். மனைவியோ புத்திசாலித்தனமாக 'அவள் உங்கட செல்லந்தானே ' என்று விலகிக்கொண்டாள்.

ரேடியோவில் தேர்தல் செய்தி தொடர்ந்துகொண்டிருந்தது. இம்முறை தேர்தலில் பழைய அரசியல்வாதிகள் ஒதுங்கிக்கொண்டதுபோல் இருந்தது எனக்கு. எப்படியும் புதிதாக வருபவரும் நாளை பழையவர்களாகவே செயற்படுவர். இது பழையவர்களுக்குத் தெரியும். அதனால் ஒதுங்கிக்கொண்டார்கள். அவர்கள் அனுபவம் சொல்லிக்கொண்டது எப்படியும் நம்மட சங்கத்துக்குப் புதிதாக சிலர் வரப்போகின்றார்கள் என்று.

நேரம் காலை பத்து தொடக்கம் பதினொன்று. ' ஒன்பது முப்பதுக்கே வரச்சொன்னவராம். எங்கட கொண்டாட்டங்கள் பற்றி எனக்கும் கொஞ்ச அனுபவம் இருக்குந்தானே எங்கட ஆட்களின் நேரம் பற்றி'

மகள் பேசப்பேச பத்து முப்பதுக்கு மண்டபத்தை அடைந்தோம். பெரிதாக சந்தடியொன்றும் தென்படவில்லை. சந்தேகம் வர, மனைவிக்கு போன் எடுத்து மண்டபத்தை உறுதிப்படுத்திக்கொண்டேன்.

'அங்க புறுபுறுத்துக்கொண்டிராமல் போனை நோண்டிக்கொண்டிராமல் அவளை அவசரப்படுத்தாமல் இருங்கோ' இது மனைவியின் கட்டளை, இதுக்கு மண்டபக்காரனையே கேட்டிருக்கலாம்.

போன் அழைத்தது. 'ஹலோ ….'

'ஆ…சொல்லுங்கோ!!! விளங்குது. கன நாளைக்குப் பிறகு. என்ன ஒரு பத்து வருடம் இருக்குமே கண்டு?'

'ஓ… ஓ…. இப்ப சும்மாதான் இருக்கின்றேன். என்ன விடயம்?'

'என்ன? விளங்கவில்லை? தேர்தலில் நிற்கிறதோ? வீட்டில மனிசியே எனக்கு வோட்டுப்போடாது.'

'ஓ… எட்டுபேர் இருக்கிறியள், ஒரு ஆள் தேவையோ …. அதுக்கு நானோ கிடைச்சன்?'

'மற்றவை யார்?'

'டேய் நீ சொல்கின்ற ஆட்கள் யாரென்று எனக்கே தெரியவில்லை. என்ன நான் தொழில் முனைவரோ? நாராயணா….?

'சரிவராது வை போனை'என்றபடி சாமத்திய வீட்டுக்கு கிளம்பினேன் மகளுடன்.

'வாங்கோ வாங்கோ வணக்கம்.'


'வணக்கம். கொஞ்சம் பிந்திவந்திட்டமோ'? குசும்பு விடுறபாடில்ல.

'இல்லை இல்லை இனித்தான் எல்லாம். இனித்தான் எல்லோரும் வருவினம்.'வாத்தியாரின் கும்பிடுகை எனக்கு ஏதோ அரசியல்வாதி கும்பிடுகிறமாதிரியே இருந்தது. நானும் கும்பிட்டுப்பார்த்தேன்.

நான் பக்கவாட்டாகக் கும்பிடுவதைப் பார்த்த மகள், 'அப்பா! சேர் இங்க நிற்கின்றார், நீங்க எங்க கும்பிடுகின்றீர்கள்?' மகளின் கேள்வியால் அசடுவழிய சிரித்தேன்.



'எங்கட ஊர்க்காரரில ஒரு பழக்கமிருக்கு நேரில வந்து சொல்லாட்டி கைநனைக்க மாட்டினம். மாஸ்ரரும் வட்ஸ் அப்பில் தானே அழைப்பிதழ் போட்டவர். அதுதான் அவர் சாப்பிடலையோ தெரியல?' என்றார் நண்பர். "அப்ப நீங்க?" "எனக்கு சோறுதான் முக்கியம். இன்று வீட்டில் சமைக்கவும் இல்லை"



'இல்லை போஸ்டரில இப்படித்தானே …' புறுபுறுத்தபடி மண்டபத்துக்குள் சென்று, யாரும் தெரிந்த முகங்கள் தென்படுகின்றனரோ என கண்கள் துழாவினது. இல்லை. இன்றைய பொழுது சரி .

மனம் ஏதோ நினைவில் போக, உதடுகள் மண்டபத்துக்குள் வருபவர்களைப் பார்த்துக் கொஞ்சம் அதிகமாகவே சிரித்துக் கொண்டது. இப்போ விளங்கியிருக்கும் என் மனம் எதை நினைத்துக்கொண்டிருக்கும் என்று.

அப்பாடா? பழைய நண்பரொருவர் வர அவருடன் வலுக்கட்டாயமாக என்னைப் பொருத்திக்கொண்டேன். வீடியோக்காரத் தம்பி என்னைப்பார்த்து சிரித்தது என்னவோ நக்கலாகத் தெரிந்தது. எங்கே சோறு போட்டாலும் வந்துவிடுவான் என்று நினைப்பது போல இருந்தது.
அல்லது அவனும் ….?

சஞ்சீவி
## சிறுகதை

நண்பரின் பக்கத்தில் அவரது நண்பர் ஒருவர் இருந்துகொண்டார்.

'நல்ல நேரம் போகப்போகுது? இப்படித்தான் எங்கட ஆட்கள் நாள்பார்த்து கோள் பார்த்து கடைசியில் எமகண்டத்தில் எல்லாத்தையும் செய்வது'

அவரின் கதை என்னை ஈர்த்துக் கொண்டது.

'உங்க பாருங்கோ மேடையில் சப்பாத்துடன் ஏறிநிற்கின்றாங்கள். என்ன இது? சம்பிரதாயங்கள் எல்லாம் பழைய சாம்பாறு போல இவங்களுக்கு? இதென்ன கால்களுக்குள் இருந்து புகை வருகிறது?'

'அது வீடியோக்காரர் போடுகினம்'சொல்லிக் கொண்டே நிறைநாழியுடன் வரும் பெண்ணின் பின்னே எனது மகளுடன் ஆசிரியரிடம் கற்கும் பிள்ளைகள் பல பூத்தட்டுகள், குத்துவிளக்குகள் … என வரிசையாக வந்துகொண்டிருந்தார்கள். ஒவ்வொரு குழுவிலும் ஒன்பது பேருக்குக் கிட்ட நின்றிருந்தார்கள். என்றாலும் ஆசிரியர் கெட்டிக்காரர், எவ்வளவு இலகுவாக ஒன்பது பேரை செற்பண்ணிட்டார். யோசனையில் நான் வாய்பிளக்க….

'அந்தச் சின்னத்தை இப்ப யார் வைத்திருக்கிறாங்கள்?' கரகாட்டக்காரன் படத்தில் கவுண்டமணியை செந்தில் கேட்டதுபோல் கேட்டார்.

பதில் சொல்லலாமா என யோசிக்க முன், ஒருவர் என்னைச் சுரண்டி'சாப்பாடு ஆயத்தமாம் சாப்பிடலாம்' என்றார்.

நேரம் ஒரு மணி, மற்ற இருவரையும் 'அப்ப சாப்பிடுவம் வாங்கோ' என்றேன்.

'இல்லை… இல்லை, பிள்ளையின் கையில் நிறைநாழி இருக்கின்றது. மங்கல காரியங்கள் நடக்கின்றன. பிள்ளை நிறைநாழியை வைத்த பிறகுதான் நாங்க சாப்பிடப் போகவேண்டும். நல்ல காரியம் நடக்கும்போது குழப்பக்கூடாது' நண்பரின் நண்பர் கண்டிப்புடன் கூறினார்.

'ஓ… நல்ல சம்பிரதாயம். எனக்கும் பொம்பிளைப்பிள்ளை இருக்கிறாள். நல்ல காரியங்கள் முடியட்டும்'

'உதென்ன ஆராத்தி எடுத்துப்போட்டு முன் பக்கமாகக் கொடுக்கிறார்கள். ஆராத்தி எடுத்தபின் அப்படியே பின்னால் கொடுக்க வேண்டும். பின்னால் ஒருத்தரையும் காண வில்லை '

எனக்கு நண்பரின் நண்பர் மீது அளவிலா மரியாதை உருவாகியது. நான் மட்டும் நாடாளுமன்ற உறுப்பினராக வந்தால் அவருக்குக் "கலாசாரக் காவலன்" என்று கொஞ்சக் காசையும் வேண்டிக்கொண்டு விருதும் கொடுக்கவேண்டும்.

'உவங்கள் என்ன இப்பவும் தனிநாடு, தனித்தேசம் என்றுகொண்டு நிற்கிறாங்கள்? இப்ப உது சாத்தியமோ?'

"சாத்தியம் அசாத்தியம் முக்கியமில்லை. தேசியம், ஊழல் இரண்டு சொல்லையும் அழுத்தி அழுத்திச் சொல்ல அலாவுதினின் அற்புத விளக்கினை தேய்க்க தேய்க்கக் கேட்பவை கிடைப்பது போல் இங்கே டொலர் வரும். முடிஞ்சா பாட்டும் போடுவினம் ரிக்ரொக்கில்"

இரண்டு மணி, பிள்ளை இன்னும் நிறைநாழியை வைக்கில்லை. அதைவிட வைக்க விடுகிறாங்கள் இல்லை என்று சொல்லலாம். வயிறு கடமுடவெனச் சத்தம் போட…

நண்பரைக் கேட்டேன், 'உங்கட ஆள் சம்பிரதாயங்கள் எல்லாம் வடிவாத் தெரிஞ்சுவைச்சிருக்கின்றார்? பழைய இலக்கியப் பாட்டெல்லாம் உதாரணம் சொல்லுகின்றார்? தமிழ், சமயம் படிப்பிக்கின்றவரோ?'

'சீச்சீ … அவருக்கு மாமனாரின் சொத்துக்கள் கிடக்கு. அவர் சும்மாதான் இருக்கின்றார். கலியாண வீடுகள் செத்தவீடுகள் எல்லாம் நிண்டு வடிவாச் செய்வார். அதால எல்லாம் தெரியும். அதனால் பலரையும் பழக்கமும்கூட'

'ஓ… ஓ…'

இப்பொழுது எனது கலாசார காவலன், 'நீங்க சாப்பிடப் போங்கோ …. ' என்றார்.

'இல்லை பிள்ளையின் கையில் நிறைநாழி….?' இழுத்தேன்.

'அது எல்லாம் முடிஞ்சுது. உவங்க வீடியோக்காரங்கள் மினக்கெடுத்துறாங்கள், நீங்க போய்ச் சாப்பிடுங்கோ, நான் ஒருக்கா அவரோட கதைச்சிட்டு வாறன்' என்று கிளம்பினார்.

நான் பிள்ளையையும் கூப்பிட்டு சாப்பிடச் சென்றே. 'ஏன் எங்களுடன் அவர் சாப்பிட வந்திருக்கிலாம்தானே? 'என்றேன்.

'எங்கட ஊர்க்காரரில ஒரு பழக்கமிருக்கு நேரில வந்து சொல்லாட்டி கைநனைக்கமாட்டினம். மாஸ்ரரும் வட்ஸ் அப்பில்தானே அழைப்பிதழ் போட்டவர். அதுதான் அவர் சாப்பிடலையோ தெரியல?' என்றார் நண்பர்.

"அப்ப நீங்க?"

"எனக்கு சோறுதான் முக்கியம். இன்று வீட்டில் சமைக்கவும் இல்லை"

ஆறுதலாக சாப்பிட்டுவிட்டு ஐஸ்கிறீம் குடிக்கும்போது இரண்டு ஐஸ்கிறீம் கப்புடன் வந்தமர்ந்தார் கலாசாரக் காவலன்.

"என்ன சாப்பிடமால் இரண்டு ஐஸ்கிறீம் கப்புடன்…?"

"நான் முதல் ஒரு கலியாண வீட்டில பதினொன்றரைக்கே சாப்பிட்டு வந்திட்டன். கொஞ்சம் பிந்தினாச்சாப்பிடலாம் என்று பார்த்தேன் முடியல. சலரோகம் இருக்கு வீட்டில ஐஸ்கிறீம் எல்லாம் கண்ணிலையும் காட்டமாட்டாங்கள். இப்படியான இடங்களில் ஆசைக்கு குடித்துவிட்டு போயிடனும்….."

"அடப்பாவி! அதுக்கு ஏண்டா நிறைநாழிக் கதையெல்லாம் விட்டு…. எங்களைப் பட்டினி போட்டாய்…?"

இப்போது நான் ஒரு முடிவுக்கு வந்து போன் எடுத்தேன்.

"ஹலோ…. டேய் தேர்தலில் நிற்க மிகப்பொருத்தமான ஆள் ஒருத்தன் இருக்கான். என்னை விட்டுவிடு…

பெயரோ……? ம் …ம் இப்போதைக்கு கலாசாரக் காவலன் நிறைநாழி என்றே போடு… '

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org